தனிப்பிரதி விலை அணா 0—1—6

Reg. No. M. 3066. 1937-செப்டம்பர் 1.

"PAHUTHARIVU" (REASON)

மலர் 3. இதழ் 5.

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

பகுத்தறிவு.

——)-(——

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை — பக்கம்.

தொழிலாளர் துயரம் (பாட்டு) (வித்வான் பா. ஆதிமூலம்)	1
நல் வழி எது? (இங்கர்சால்)	3
ஆராய்ச்சி உலகின் ஆச்சரியங்கள் (எம். எஸ். கிருஷ்ணசாமி)	10
நவராத்திரி மர்மம் (கைவல்யம்)	17
உண்மை (பி. ஆர். எஸ்)	28
முடிசூட்டு விழா (சேப்மென் கோபன்)	33
ஆன்ம கற்பனையும் பில்லி சூனியமும் (எப். சிங்காரவேலு)	38
தர்மமும் பாவபுண்ணியமும் (ஈ. வெ. ரா.)	46
"புண்ணிய ஸ்தலங்கள்" (சித்திரபுத்திரன்)	55
ஹிந்தியின் மர்மம் (நூ. சிதம்பரம்)	61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

)O(

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. செப்டம்பர் 1. { இதழ் 5.

தொழிலாளர் துயரம்.

(O)

(வித்வான் பா. ஆதிமூலம்)

(இராகம் ஹம்சா நந்தி)

எம்மை உலகை நோக்குவீர்
எழில் சேர் செல்வீர்
எம்மை உலகை நோக்குவீர்.

தாழ்மையுடன் வேலை செய்திடும் தொழிலாளி
தன்னால் அல்லவோ அடைந்தீர் பொருள் அனைத்தும்
(எம்மை)

தோகையரா

குடிப்பதற்கோ அரை வயிற்றுக் கஞ்சிக்கில்லை
குளிரினால் வருந்திடும் குடியான மக்களுக்கோ உடுக்க இல்லை
நடுக்கவே பல பேர்கள் நடுவழியில் மழை வெயிலால்
[நனைந்தும் காய்ந்தும்
நாடோறும் நலியுறுதல் காணொணாதோ.

பல்லவி எடுப்பு.

நியாயம் அல்லவே அது நீரே அநுபவித்தல்
ஈனமதாகும் அல்லவோ எழில் சேர் செல்வீர் (ஏழ்மை)

தோகையரா.

தொழிலிலா ஏழைகட்குத் தொழிற் சாலை
உண்டாக்கித் தொழில் கொடுத்து
அழிவிலாப் புகழ் எய்தி அனவரதம் எல்லோரும் இன்பம்
கழியும் வகை பொருளீந்து [எய்த
கனமுடனே யாவர்களும் வாழ்வதற்கு
பழியிலாப் பொருள் படைத்த
பணக்கார முதலாளி படை திரட்டே.

பல்லவி எடுப்பு.

இன்னும் சும்மா இருப்போம் என்றெண்ணிக் கொள்ள
நன்னலம் போற்றும் செல்வீர்காள் [வேண்டாம்
நவில்வேன் கேளீர். (ஏழ்மை)

தோகையரா.

உலகினில் உன்னத நிலையினை அடைந்திட்ட
உத்தம நாடு தன்னுள் உயர்மிகும் ரஷ்யாவை
உற்றுமே நோக்குவீர் உய்வகை நாடிக்கொள்வீர்
உன்மத்த ராஜனாம் ஜார்ஜ் மாண்ட விதத்தினை
உற்றுமே உணர்ந்து கொண்டு
தன் சொத்தைப் பங்கிட்டு சகோதரப்பான்மையால் சமமாக
[வாழுவீரே.

பல்லவி எடுப்பு.

ஆதிமூலன் தன் கீதம் ஓதி அறிதல் நிதம்
நீதி வழியில் நிற்றலே உமக்கு நியாயம். (ஏழ்மை)

நல் வழி எது?

நான்கண்ட இரு காட்சிகள்.

(இங்கர்சால்.)

IX

இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கடவுளுக்காக வாழ்க்கை நடத்துவது. அந்த வழியில் வாழ்க்கை நடத்திப் பரிசோதித்தாய் விட்டது. பலன் எப்பொழுதும் ஒருப் போலவே இருந்து வந்திருக்கிறது. பாலஸ்தீனத்தில் அநேக ஆண்டுகளுக்குமுன் அந்த வழியிலே சாதித்துப் பார்க்கப்பட்டது. ஆனால் பரிசோதனை செய்த மக்களைக் கடவுள் காப்பாற்றவில்லை அவர்கள் தோல்வியடைந்து ஹிம்சிக்கப்பட்டுப் பரதேசிகளானார்கள். அவர்கள் தம் நாட்டையிழந்து நாலா பக்கமும் சிதறிச்சென்று வாழ்க்கை நடத்தும்படியாயிற்று. பல நூற்றாண்டு காலம் அவர்கள் கடவுள் உதவியை எதிர் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் எல்லாம் மீண்டும் கூடலாமென்றும் நகரங்களையும், ஆலயங்களையும், பலிப்பீடங்களையும் மீண்டும் கட்டலாமென்றும் ஜிஹோவாவின் அருள்பெற்ற ஜனங்களாய் மீண்டும் ஆகலாமென்றும் கடவுளுதவியினால் எதிரிகளை வென்று மீண்டும் உலகத்தை ஆளலாமென்றும் அவர்கள் நம்பிக்கொண்டு இருந்தார்கள். நூற்றாண்டுகள் செல்லச் செல்ல அந்த நம்பிக்கை கரையத் தொடங்கிற்று. இப்பொழுதோ அந்த எண்ணம் பகற்கனவு என அறிவாளிகள் எல்லாம் முடிவுகட்டி விட்டனர்.

கடவுளுக்காக வாழ்க்கை நடத்தும் வித்தை சுவிட்லாந்திலும் சோதித்துப் பார்க்கப்பட்டது. கடைசியில் அம்முயற்சி அடிமைத்தனத்திலும் சித்திரவதையிலும் முடிந்தது. முன்னேற்றத்துக்கான வழிகள் எல்லாம் அடைபட்டன. அதிகாரிகள் மட்டுமே தத்தம் கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்பட்டார்கள். இம்மண்ணுலக இன்பத்தை விருத்தி செய்ய ஒருவரும் முயலவில்லை. குற்றமற்ற இன்பங்கள் எல்லாம் பாபம் என மதிக்கப்பட்டன. எவரும் நகைக்கக் கூடாதென்று

தடுக்கப்பட்டது. எல்லா இயற்கை இன்பங்களும் இகழப்பட்டன. காதலுங்கூட பாபம் எனப் புறக்கணிக்கப்பட்டது.

நோன்பினாலும் பிரார்த்தனை செய்தும், உபதேசங்களைக் கேட்டும் நித்திய நரக துன்பங்களைப் பற்றிப்பேசியும் பழைய ஏற்பாட்டு வமிசாவளிப் பெயர்களை நெட்டுருவேற்றியும் இடை இடையே தம்மைப்போன்ற மக்களில் ஒருவரை நெருப்பிலிட்டுக் கொளுத்தியும் அவர்கள் பொழுது போக்கினார்கள்.

தெய்வீக வாழ்க்கை ஸ்காட்லாந்திலும் பரிசோதனை செய்து பார்த்தாகிவிட்டது. மக்கள் எல்லாம் கிரேக் பாதிரிமாருக்கு அடிமைகளானார்கள். பாதிரி மாரெல்லாம் சிறுசிறு கொடுங்கோலரசரானார்கள். வாழ்க்கையின் ஊற்றுக்கண்ணிலேயே அவர்கள் நஞ்சுகலந்து விட்டார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் பலாத்காரமாகப் புகுந்து மூட பக்தியையும், பீதியையும் மக்களுக்கு ஊட்டி இராப்பொழுதெல்லாம் பேய்கள் தாண்டவமாடுவதாக அறிவற்ற மக்கள் நம்பும்படி செய்தார்கள். தாமே கடவுள் அருள் பெற்றவர்கள் என்றும் கடவுள் அனுப்பிய செய்திகளையே அவர்கள் உபதேசம் செய்வதாகவும் அவர்கள் கட்டளையை மீறுவது தெய்வ தூஷணையாகுமென்றும் அவர்களது கட்டளைகளை மீறுகிறவர்கள் நித்திய நரக தண்டனையனுபவிப்பார்கள் என்றும் அவர்கள் அச்சுறுத்தினர். அவர்களுடைய ஆட்சியில் ஸ்காட்லாந்து தேச முழுதும் அழுகையும், புலம்பலும், துன்பமும், துக்கமும், துயரமுமே நிறைந்திருந்தன. மக்கள் எல்லாம் அடிமைகளாயினர்.

தெய்வீக வாழ்க்கை இங்கிலாந்திலும் சோதனை பார்க்கப்பட்டு விட்டது. பழைய ஏற்பாட்டு முறைப்படி ஒரு அரசாங்கம் நிறுவப்பட்டது. சட்டங்கள் எல்லாம் அநேகமாக அற்பத்தனம் வாய்ந்தவைகளாயும் ஆபாசங்களாயும் இருந்தன; தண்டனைகளோ குரூரமாயும் இரத்த வெறி கொண்டனவாயும் இருந்தன. மத சுதந்தரம் ஒரு குற்றமென்றும் தெய்வ துரோகமானதென்றும் கருதப்பட்டது. அதிகாரிகளுக்கு மாறான அபிப்பிராயமுடையவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்; சித்திரவதை செய்யப்பட்டார்கள்; அங்கச் சேதம் செய்யப்பட்டார்கள்; நாடு கடத்தப்பட்டார்கள். பேய்களோடு சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்டவர்கள் சிறைப் படுத்தப் பட்டார்கள்;

அல்லது கொல்லப்பட்டார்கள். சமயச் சார்புடைய ஒரு அரசாங்கம் நிறுவப்பட்டது; பாதிரிமார் கடவுள் பிரதிநிதிகளாகப் பாவிக்கப்பட்டார்கள்; அவர்களே சட்டம் இயற்றினார்கள்; தண்டனை விதித்தார்கள். அனைத்தும் பாதிரிமார் கண்காணிப்பிலேயே இருந்து வந்தன. அவர்கள் கருணையோ இரக்கமோ காட்டவில்லை. இயற்கையாக உள்ளவைகளையெல்லாம் அவர்கள் மனங்கொண்ட மட்டும் வெறுத்தார்கள். மறு உலகத்தில் மோக்ஷ இன்பம் அளிக்கப்போவதாகக் கூறி இவ்வுலக இன்பங்களை ஒழிக்க அவர்களாலான தடைகளையெல்லாம் ஏற்படுத்தினார்கள்.

தமது கட்டளைகளை மீறுகிறவர்களையெல்லாம் நித்திய நரக தண்டனையனுபவிப்பார்கள் என்ற ஒரே நம்பிக்கை அவர்களுக்கு மிக்க ஆறுதலையையும் மகிழ்ச்சியையும் அளித்து வந்தது.

அநாகரிக காலத்தும் தெய்வீக வாழ்க்கை பரிசோதித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. அநேகாயிரம் தூக்கு மரங்களில் பிணங்கள் தொங்கின; எண்ணற்ற ஈட்டிகள் மக்கள் ஹிருதயத்திலே பாய்ந்தன. சுதந்தர சிந்தனையாளரெல்லாம் இருட்டறைகளில் அடைக்கப்பட்டார்கள். கடவுள் பெயரால் சமஸ்த கொடுமைகளும் செய்யப்பட்டன; சமஸ்த குற்றங்களும் நடைபெற்றன; சுதந்தரம் மண்ணுலகத்தைவிட்டு மறைந்தது. எல்லா இடங்களிலும் நிலைமை இம்மாதிரியாகவே இருந்தது. தெய்வீக வாழ்க்கையின் பயன் இரத்தப் பிரவாகமும் பிணக் குவியல்களுமே.

வேறொரு வழி இருக்கிறது. அதாவது இந்த மண்ணுலகத்தில் மக்களுக்காக வாழ்வது. அதற்காக நாம் மூளையை விருத்தி செய்வோம்; உள்ளத்தை நாகரிகப்படுத்துவோம். மக்கள் இன்பத்துக்குரிய வழிகளை ஆராய்ந்தறிந்து அதற்கு அனுகுணமாக வாழ்க்கையை நடத்துவோம். அறியாமையையும் வறுமையையும் குற்றங்களையும் ஒழிக்க நம்மாலானதைச் செய்வோம். கட்புலனுக்கு எட்டாத சக்திகளையெல்லாம் நம் வயப்படுத்தி உலக இன்பத்தை விருத்தி செய்யும் பொருட்டு உடலின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மனத்தின் பசியைத் தணிக்கவும், இயற்கை ரகசியங்களை அறியவும் நம்மாலான முயற்சிகளைச் செய்து கொண்டிருப்போம்.

தெய்வங்கள் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளட்டும்; தெய்வங்களைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நாம் மக்களுக்காக வாழ்வோமாக. இயற்கை உண்மைகளை அறிய முயன்றவர்கள் தம்மைப் போன்றவர்களை ஹிம்சிக்கவில்லையென்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். வான சாஸ்திரிகளும் ரஸாயன சாஸ்திரிகளும் சிறைகளை உண்டுபண்ணவோ மக்களுக்குத் தளை பூட்டவோ செய்யவில்லை. பூகர்ப்ப சாஸ்திரிகள் சித்திரவதை செய்யும் கருவிகளைக் கண்டு பிடிக்கவுமில்லை. தமது அயலாரைத் தீயிலிட்டுக் கொளுத்தி தத்துவ சாஸ்திரிகள் தமது கொள்கைகளை நிலைநாட்டவுமில்லை. பெரிய அவிசுவாசிகளான சிந்தனாவாதிகள் எல்லாம் மக்கள்க்ஷேமத்துக்காகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

உண்மையை உரைப்பதும் உண்மையாகவே நடப்பதும், உண்மை அறிவை வளர்ப்பதும், தமது உள்ளநிலையை உள்ளபடியே பிறருக்கு விளக்கிக்காட்டுவதும், உட்கருத்துகளை படம் பிடித்துக் காட்டுவதும் நேர்மையான வாக்குகளால் விளக்குவதும் மிகவும் கௌரவமான குணம் என்பதை யாவரும் உணரவேண்டும்.

X

இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று ஒடுக்கமான வழி. அவ்வழியே சுயநலக்காரரே ஒரே வரிசையாகப் போகிறார்கள். கணவனும் மனைவியும் தன் குழந்தைகளை வாரியணைத்துக்கொண்டு அவ்வழியே போக முடியாது. அது அவ்வளவு ஒடுக்கமானது. அந்த வழி மூடபக்தி மணற் காட்டினூடே செல்கிறது. அந்த வழியிலே அதிகப் பிரயாணிகளைக் காணமுடியாது. சிற்சில வேளைகளில் தப்பித் தவறி ஒன்றோ இரண்டோ பிரயாணிகள் தோன்றக்கூடும். அந்த ஒடுக்கமான பாதையிலே புல் அடர்ந்து வளர்ந்திருக்கிறது; சக்கி முக்கிக் கற்களும், உடைந்த கண்ணாடிகளும் சிதறிக் கிடக்கின்றன. ஓரங்களிலே நெருஞ்சில்களும் முட்செடிகளும் நிறைந்திருக்கின்றன. அங்கே இரு பிறப்பாளர் இரத்தம் சொட்டச் சொட்ட நொண்டி நொண்டி நடக்கிறார்கள். வழியருகே ஒரு புஷ்பத்தைக் கண்டால் அதைப் பறிக்காதீர்கள். அது சோதனை. அப்புஷ்பத்தின் அடியில் ஒரு சர்ப்பம் இருக்கிறது.

புது எரு சலேம் நகரை நோக்கிக் கொண்டே உங்கள் போக்கில் நடவுங்கள். மனைவியையோ குழந்தைகளையோ நண்பர்களையோ திரும்பிப் பார்க்கவேண்டாம். உன் ஆத்மாவுக்கு மட்டும் மோட்சம் கிடைக்க வழிதேடு. உன் அன்புக்குரியவர்கள் எல்லாம் நரகத்தில் கிடக்கையில் நீ மட்டும் சுவர்க்கத்தில் சந்தோஷமாக இருப்பாய். நம்பு; உறுதியாக நம்பு. பிறர் நற்குணத்தின் பயனாய் நீ பரிசு பெறுவாய்; வலப்பக்கமோ இடப்பக்கமோ திரும்பிப் பாராதே! முன் நோக்கிக் கொண்டு நேரே நட, சுயநலம் வாய்ந்த—பலனற்ற—வாடிய உன் ஆத்மாவை நீ காப்பாற்றிக்கொள்வாய்.

மண்ணுலகத்திலிருந்து கிறிஸ்துவின் கருணைபற்றி சுவர்க்கத்துக்குச் செல்லும் ஒடுக்கமான வழி இது தான்.

வேறொரு வழி இருக்கிறது. அது விசாலமான வழி: விசாலமான, தாராளமான வழியை எனக்குக் காட்டு. எல்லோருக்கும் சமமாக நடக்கக்கூடிய அகலமான வழியை எனக்குக் காட்டு. பறவைகள் பாடும்—கதிரவன் ஒளி வீசும்—ஓடைகள் ஒலிக்கும்—விஸ்தாரமான வழியை எனக்குக்காட்டு. கழனிகளினூடே செல்லும் புஷ்பச்செடிகள் நிறைந்த விசாலமான வழியை எனக்குக்காட்டு. மகிழ்ச்சியைத் தரும்—மன எழுச்சியை உண்டு பண்ணும்—மனதைப் பரிசுத்தப் படுத்தும்—அமைதியை நிறைக்கும் விஞ்ஞான சாஸ்திரங்கள்—கலைகள்—சங்கீதம் முதலிய துணை கொண்டு விசாலமான அந்த வழியிலே நாம் செல்வோமாக!

மனைவி மக்கள் குழந்தை குட்டிகள் நண்பர்களுடன் அந்த விசால வழியாக நாம் களிப்புடன் செல்வோமாக!

இந்த உலகம் ஒரு பெரிய ஆரஞ்சுமரத்துக்கு ஒப்பாக இருக்கிறது. அதில் புஷ்பங்களும், பிஞ்சுகளும், காய்களும், கனிகளும் நிறைந்திருக்கின்றன. மரத்தின் கீழே கிளைகளிலிருந்து உதிர்ந்த கனிகள் மண்ணோடு மண்ணாகப் போகின்றன.

ஒவ்வொரு ஆரஞ்சும் ஒரு உயிர். அதைப் பிழியுமட்டும் பிழிந்து அதிலுள்ள ரஸத்தையெல்லாம் கிரகித்துக் கொள்வோம். மரணம் வரும்போது "அதில் ஒன்றும் இல்லை, வெறும் சக்கை" என்று கூற ஆயத்தமாக இருப்போம்.

நாம் விசாலமான இயற்கையான பாதை வழியே நடப்போமாக! நாம் மக்களுக்காக வாழ்வோமாக!

மூட பக்தியினாலும் மதங்களினாலும் மிருகங்களையும் கல்லையும் கடவுளையும் வணங்கியதினாலும் உலகத்துக்கு ஏற்பட்ட துன்பங்களை நினைத்தால் அம்மம்ம! யாருக்குத் தான் பயித்தியம் பிடிக்காது? நெடுங்கால அறியாமை, அச்ச இருளை எண்ணிப்பாருங்கள்! இறந்த காலப்புலம்பல்களை யும் ஓலங்களையும் துன்பங்களையும் எண்ணிப்பாருங்கள்! பாழான நாட்களையும் எண்ணிப் பாருங்கள்.

நான் பார்க்கிறேன், இருண்ட குகைகளிலே இரையை எதிர்பார்த்துக்கொண்டு தெய்வீகப் பாம்புகள் சுருண்டு சுருண்டு கிடக்கின்றன. அவைகளின் திறந்த வாய்களையும் ஆடிக்கொண்டிருக்கும் நாக்குகளையும் ஜொலிக்கும் கண் களையும் கொடிய விஷப் பற்களையும் நான் பார்க்கிறேன் சர்ப்பக் கடவுளைத் திருப்திப்படுத்துவதற்காக தாயமாரும் தந்தைமாரும் எறிந்த குழந்தைகளை அவை சுற்றி மடக்கி இறுக்கிக் கொல்லுவதை நான் பார்க்கிறேன்.

நான் மீண்டும் பார்க்கிறேன். தங்கம் பூசிய கற்கோயில் களை நான் பார்க்கிறேன். மனித ரத்தத்தினால் சிவந்திருக்கும் கும் பலிப்பீடங்களையும் பார்க்கிறேன். பெண்களின் மார்பில் பூசாரிகள் ஈட்டிகளைக்குத்தி இறக்குவதையும் நான் பார்க் கிறேன்.

நான் திரும்பவும் பார்க்கிறேன். வேறு பல ஆலயங்களும் பலிப்பீடங்களும் தெரிகின்றன. அங்கே அக்கினிக் குண்டங் களிலே குழந்தைகளின் பிரேதங்கள் எரிந்து கொண்டிருக் கின்றன. மாடுகளும், ஆடுகளும், புறாக்களும பலியிடப்படும் வேறு பல ஆலயங்களும் பலிப்பீடங்களும தெரிகின்றன.

நான் பின்னும் பார்க்கிறேன். மற்றும் பல ஆலயங்களும் பூசாரிகளும் பலிப்பீடங்களும் தோன்றுகின்றன. அங்கே மனிதனின் சுதந்தரம் பலியிடப்படுகிறது.

மேலும் நான் பார்க்கிறேன் தெய்வங்களின கோபுரங் களும், விவசாயிகளின் குடிசைகளும், பாதிரிமார் அங்கிகளும், அரசர்கள் ஆடைகளும், சத்திய வாதிகளின் கந்தைகளும் காணப்படுகின்றன.

பின்னும் நான் பார்க்கிறேன். தெய்வ பக்தர்கள் மக் களைக் கொலை செய்கிறார்கள். உத்தமர்களும், யோக்கியர்

களும் சிறையில் கிடப்பதைப் பார்க்கிறேன். நாடு கடத்தப் பட்டவர்களையும், பரதேசிகளையும், சமூகப்ருஷ்டர்களையும் நற்காரியங்களுக்காக உயிர் துறந்த லக்ஷோப லக்ஷம் வீரர் களையும், விதவைகளையும், அநாதைகளையும் நான் பார்க் கிறேன். சித்திரவதை செய்யும் ஆயுதங்களையும் லக்ஷக் கணக்கான ஓலமிடும் பிரேதங்களையும் நான் பார்க்கிறேன்.

சிறைக்கூடங்களின் பயங்கர இருளை நான் பார்க்கி றேன். விலங்குகளின் ஓசையை நான் பார்க்கிறேன். சிதைகள் எரிவதைப் பார்க்கிறேன். சுவாலையால் கருகிய முகங்களைப் பார்க்கிறேன். பக்தர்களான பேய்கள் ஆர்ப்பரிப்பதையும், ஆனந்தக் கூத்தாடுவதையும் நான் பார்க்கிறேன். பூசாரி களின் பாதங்களின் அடியில் அகப்பட்டு நசுங்கும் ஒரு உல கத்தை நான் பார்க்கிறேன். சுதந்திரத்துக்கு விலங்கு போட் டிருப்பதையும் நற்செயல்களெல்லாம் பாபம் என இகழப்படு வதையும் அறிவு வெறுக்கப்படுவதையும் மடமை வணங்கப் படுவதையும் பித்தலாட்டம் அரசு செலுத்துவதையும் மானத்தின் நெற்றியிலே அவமானச் சூடு போட்டிருப்பதை யும் நான் பார்க்கிறேன்.

நான் அப்பால் பார்க்கிறேன். கீழைத்திசையிலே நம்பிக் கை வானத்திலே அருணோதய ஒளி வீசுகிறது. நான் மேலும் பார்க்கிறேன். சாம்பல், இரத்தம், கண்ணீர்களின் மத்தியிலிருந்து வீரர்கள் குதித்திறங்கி இறந்த காலக்கொடு மைகளை மன்னித்து விட்டு எதிர்காலத்தை வாழ்த்துகிறார் கள். உலக முழுதும் போர்க்களமாயிருப்பதை நான் பார்க் கிறேன். மகுடங்கள் நொறுங்கி விழுகின்றன; கோபுரங்கள் தலை சாய்கின்றன; விலங்குகள் தவிடுபொடியாகின்றன. மதங்கள் மாற்றமடைகின்றன.

பெரிய மலையுச்சிகளிலே புனித ஒளி வீசுகிறது. உதய கால புஷ்பங்கள் மலர்கின்றன. நான் மீண்டும் பார்க்கி றேன். புதிய நாடுகள் காண பலர் கடலில் பிரயாணம் செய் வதை நான் பார்க்கிறேன். இயற்கை சக்திகள் சாஸ்திரி களை அடிமைப்படுத்துவதைப் பார்க்கிறேன். பெரிய பெரிய பள்ளிக்கூடங்கள் கட்டப்படுவதை நான் பார்க்கிறேன். ஆசிரி யர்களும், விஞ்ஞானிகளும் பாதிரிமார் ஸ்தானங்களைக் கைப்பற்றுவதைப் பார்க்கிறேன். தத்துவ ஞானிகள் தோன் றுகிறார்கள். சிந்தனையாளர்கள் அறிவுச் செல்வங்களை

ஆராய்ச்சி உலகின் ஆச்சரியங்கள்.

(எம். எஸ். கிருஷ்ணசாமி பி. ஏ.)

அகண்டாகாரமான வெளியில் பறந்து செல்லும் 'ராக்கெட்' என்னும் ஆகாய வெடி (நட்சத்திர மண்டலங்களுக்கு பறந்து செல்லும் விமானங்கள்) விஷயத்தில் என்னதான் உள்ளது?

சில நாட்களுக்கு முன்னர் மான்செஸ்டர் நகரில் பதினேழு வயதுகொண்ட சில வாலிபர்கள் நட்சத்திர மண்டலங்களின் சங்கம் என தங்களை அழைத்துக்கொண்டு பரீட்

யெல்லாம் உலக மக்களுக்கு வழங்குகிறார்கள். மக்கள் உதடுகள் எல்லாம் உண்மையினால் பொலிவடைகின்றன.

கடைசியாக ஒரு முறை கூட நான் பார்க்கிறேன். இப்பொழுதுநான் பார்ப்பது எதிர்காலத்தை. போப்புகளும் பாதிரிகளும் அரசர்களும் ஒழிந்துபோய் விட்டார்கள். பலிப்பீடங்களும் சிங்காசனங்களும் மண்ணாய் விட்டன. வானமண்டல தேவர்களும் பூமண்டல அதிகாரிகளும் சாம்பலாகி விட்டனர். எல்லாத் தெய்வங்களும் இறந்து விட்டன. ஒரு புது மதத்தினால் மனுக்குலம் கீர்த்தியடைகிறது. அதுதான் மண்ணுலக வேதம்; உடலும் மனமும் மூளையும் சேர்ந்து அருளிய மதம்.

அமைதி நிலவும் ஒரு உலகத்தை நான் பார்க்கிறேன். அங்கே உழைப்பாளிக்கு சரியான பிரதிபலன் கிடைக்கிறது. அந்த உலகத்திலே சிறைகளோ, அநாதச் சாலைகளோ, பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளோ இல்லை. அங்கே இரப்போரும் இல்லை. நோய்களும் இல்லை. அகால மரணமும் இல்லை. அச்சமில்லை. மகிழ்ச்சி வளர்கிறது; காதல் விருத்தியாகிறது. உலகம் விடுதலை பெற்று விட்டது.

சார்த்தமான ஆகாய வெடி ஒன்றால் தங்களைப் பெரிதும் ஆபத்துக்கு உள்ளாக்கிக் கொண்டனர். காரணம் இவர்களின் ஆகாய வெடி வெடித்து விட்டது.

இந்த விஷயத்தை பத்திரிகையில் பார்த்த பலர், "அப்பா! இதில் என்ன இருக்கிறது. நாம் நினைத்தமாதிரி ஆகாய வெளியில் 'ராக்கெட்'டால் பறந்து செல்வதென்பது அர்த்த மற்றதாகும். இந்த ஆகாய வெடி விளையாட்டு பையன் களுக்கோ, அல்லது மனது பேதலித்தவர்களுக்கோ ஏற்ற விளையாட்டாகும்" எனக் கூறினர்.

ஆனால் இவர்கள் கூறுகிறமாதிரி, ஆகாய வெடி விஷ யம் விளையாட்டல்ல; அர்த்தமற்றதல்ல. ஆகாய வெடிகளில் மனிதர்கள் பறந்து செல்வதென்பது கற்பனை உலகத்தின் பாற் பட்டதென்ற காலம் போய்விட்டது. ஆகாய வெடியின் விஷயம் பெரும் விஞ்ஞானிகளான, பெரும் விமான நிபுண ரும் பிரான்ஸ் விஞ்ஞானியுமான ராபர்ட் எஸ்னால்ட்—பெல் டர், அமெரிக்காவைச்சார்ந்த கோடார்ட், ஷெல்டன், வியன் னாவைச்சார்ந்த புரபொசர் ஓபெர்த், பெர்லினைச் சார்ந்த டாக்டர். ஜோஹன்னஸ் விங்க்லர், இவர்களின் கவனத்தை பெரிதும் தற்பொழுது ஈர்த்துள்ளது.

பிரிட்டனிலும், ஜெர்மனியிலும் பெரும் விஞ்ஞானி களும், எஞ்சினீயர்களும் ஆகாய வெடியில் பறப்பதன் சம் பந்தமாக பெரிதும் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விஷய சம்பந்தமான விஞ்ஞானக் குறிப்புகள் ஏரா ளம்; ஆகாய வெடி நிர்மாணிப்பு, அது முன்னோக்கிச் செல் லும் வேகம் இவைகள் சம்பந்தமான பரீட்சார்த்தங்கள் உலக முழுவதும் செய்யப்படுகின்றன; ராக் பெல்லர், கக்கல்ஹீம் போன்ற பெரும் வியாபார மன்னர்கள் ஆகாயவெடி வேலை யின் சம்பந்தமாக பல்லாயிரக்கணக்கான பவுன்கள் அளிக் கின்றனர்.

ஆகாய வெடியில் செல்லும்பொழுது, ஆகாய வெடியின் சிப்பந்திகளும், பிரயாணிகளும் சமாளிக்க வேண்டிய கஷ்டங் களைப்பற்றியும், அக்கஷ்டங்களை மனித சரீரங்கள் எவ் வாறு சமாளித்து நிற்கும் என்பதைப் பற்றியும் நிர்ணயிக்க ஓயாமல் பரீட்சைகள் நடந்து வருகின்றன. விமான உலகத் தின் ஆரம்ப காலத்தில் மனிதர்கள் தங்கள் உயிர்களை

ஆபத்துக்கு உட்படுத்தினதைப்போல் ஆகாய வெடிப் பரீட்சார்த்தங்களிலும் தங்கள் உயிர்களை ஆபத்துக்கு உட்படுத்துகின்றனர். ஆகாய வெடியின் விஞ்ஞான உலகம் இளம் பிராயத்தில் உள்ளதால், இதற்கு இரையானவர்களின் தொகை பன்னிரெண்டாகும்.

பிரிட்டிஷ் விமானப்படையின் வைத்தியத் தலைவர்களில் ஒருவரான கேப்டன். மார்ஷல் என்பவர் பிரிட்டிஷ் வைத்தியப் பத்திரிகையில் (British Medical Journal) சந்திர மண்டலத்திற்கு ஆகாய வெடியில் செல்லும் மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான மூச்சு இழுப்பதற்கும் வெளியிடுவதற்குமான உபகரணம் தற்பொழுது வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டாய்விட்டதென்று கூறுகிறார்.

பூமியின் ஆகர்ஷண சக்திக்கு உட்படாதவாறு ஜெர்மனியில் பரீட்சை செய்யப்பட்டு வரும் மெஷின்கள், மனிதர்கள் நிமிடத்திற்கு இரண்டு மைல் வேகத்தில் ஆகாய வெடியில் செல்வதை சமாளிக்கக்கூடுமென்றும், அதுவும் ஒன்பது நிமிடங்கள் யாதொரு தடையுமின்றி அவ்வாறு செல்ல முடியுமென்றும் நிரூபித்துள்ளன.

பூமியின் ஆகர்ஷண சக்தியிலிருந்து தப்பவேண்டுமெனின் ஆகாய வெடி வினாடிக்கு ஏழு மைல்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே செல்லவேண்டுமென விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். இதை உத்தேசித்து ஜெர்மனியில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் இதுவரை மேலே கூறியுள்ள அளவிற்கு வெற்றியளித்துள்ளது.

இந்த வேகத்தில் ஆகாய வெடிகள் செலுத்தப்பட்டால், கப்பல் சிப்பந்திகளின் சரீரங்களையே அடியோடு கெடுத்துவிடலாம்.

ஆனால் தொடர்ந்து ஆகாய வெடிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெடித்து செலுத்தப்படுவதன் மூலம், விஞ்ஞானிகள் இந்த வேகத்திற்கு கொண்டு வருவார்.

மனிதர்கள் யாதொரு பாதுகாப்புமின்றி நிமிடத்திற்கு இரண்டு மைல் வேகத்தில் செலுத்தப்படுவதை சமாளிக்க முடியும் என்பதானது, அகண்டாகார வெளியில் யாத்திரை செய்வதென்பதற்கு ஓர் பெரும் முன்னேற்றப்படியாகும்.

பெரும் விஞ்ஞான நிபுணர்கள் ஆகாயவெடி சம்பந்தமாக ஈடுபட்டிருப்பதும், இதுவரை இதன் சம்பந்தமான விஞ்ஞான ஆராய்ச்சி மிதமாக நடந்துகொண்டு வருகிறதென்பதும், ஆகாயவெடி விஷயம் கற்பனை உலகத்திலிருந்து முற்றிலும் மாறிவிட்டதென்பதை பெரும்பாலான மக்களை திருப்திப்படுத்துவதற்கு போதுமானதாகும். இதில் பெரும் அமெரிக்க விமானியான கர்னல். லிண்ட்பர்க், விஞ்ஞான உலகத்தில் ஐன்ஸ்டின் பெயருடன் அடிக்கடி இணைக்கப்படும் டாக்டர்மிலிகான், கார்னிஜி ஸ்தாபனத்தின் தலைவரான மெரியாம், ஆகாய வெளியை ஆராய்ச்சி செய்யும் புரபொசர் பிக்கார்ட், இன்னும் பிற நிபுணர்கள் ஈடுபட்டிருக்கிறார்களெனில், ஆகாய வெடி விஷயம் வேடிக்கை அல்ல. இவர்கள் எல்லாம் முடியாத விஷயத்தில் ஈடுபடுவதில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

நட்சத்திர மண்டலங்கள் ஆராய்ச்சி சம்பந்தமான ஆயிரக்கான பிரச்னைகளின் பல்வேறு அம்சங்களை தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றனர்.

இதுவரை ஆகாயவெடி சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கு செலவழிக்கப்பட்ட தொகை 100,000 பவுனாகும்; முன்னர் கூறப்பட்ட டஜன் உயிர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்த வேலையில் சிரிப்பதற்கு யாதொன்றும் இல்லை; அவ்வாறு ஏதாவது இருப்பின் நட்சத்திரமண்டலங்கள் சங்கத்தின் இங்கிலாந்து கிளையிலுள்ள அங்கத்தினர்கள் மிகச் சமீபத்தில் எடுத்துக் கொண்டுள்ள ஓர் நடவடிக்கையாகும். பார்லிமெண்டை இவர்கள் வற்புறுத்தவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஏனெனில், தற்போதைய பிரிட்டிஷ் சட்டத்தின்படி சந்திரமண்டலத்திற்கு பறந்துசெல்வதென்பது சட்டத்திற்கு விரோதமானதென்பதை இவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

நீண்டதூரம் செல்வதற்கான ஆகாய வெடிகள் வெடிப்பதற்கான நெருப்பு ஆவி—பிராண வாயுவும் பெட்ரோலும் கலந்த வாயு-வெடி மருந்து சாமான்கள் சட்டப்படி, இங்கிலாந்தில் தடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைகளை எல்லாம் நீக்குவதற்கு அவர்கள் முற்படாவிடின், அவர்கள் ஆகாய

வெடி பறப்பதன் சம்பந்தமாக எந்த விதமான உபயோககர மான பரீட்சைகளையும் மேற்கொள்ள முடியாது.

ஆகாய வெடியின் வேகத்திற்கான எந்த நெருப்பு ஆவி யும் உதவி புரியுமா என்ற சந்தேகம் உங்களுக்கு எழுந்தால், அமெரிக்க ஆகாய வெடி ஆராய்ச்சியாளர்கள் கடந்த வருடம் ஆகாய வெடி (நம்பர் 4) ஒன்றை செலுத்தினதில், அது, பதினைந்து விநாடிகளில் மணிக்கு 700 மைல்கள் வேகத்தை அடைந்ததென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இதானது பூமியின் ஆகர்ஷண சக்தியை மிஞ்சுவதற்கான வேகத்தைக் காட்டிலும், ஏறக்குறைய இரு மடங்கு வேகத்தை அடைந்துள்ளது.

இந்த ஆகாய வெடிகளில் சில, பல்லாயிரம் பவுன் செலவில் கட்டப்பட்டு இவைகள் பறப்பதன் சம் பந்தமான ஒவ்வொரு விவரமும் உலக உபயோகத்திற்காக குறித்துக் கொள்ளப்படுகிறது.

இவைகள் எல்லாம் உங்களுக்கு சிரிப்பை மூட்டினால் ஆரம்ப காலத்திய விமானத்தைப்பற்றி சிரித்தவர்களை ஞாப கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஓரிரண்டு சந்ததிகளுக்கு முன்னர் மோட்டார் கார்களின் முன்னர் சிகப்புக்கொடி யுடன் நடந்து சென்ற மனிதனையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இதுவரை ஆகாயவெடி சம்பந்தமாக அடைந்துள்ள ஆராய்ச்சியின் அபிவிர்த்தியும், விஞ்ஞானிகள் ஈடுபட்ட பிரச்சினைகளும் அவர்கள் அடைந்துள்ள முடிவுகளின் சுருக் கமும் வருமாறு:—

முதலில், எந்த விதமான ஆகாய வெடி இருப்பதென்ற ஆராய்ச்சி வேலை செய்யப்பட்டுள்ளது. பல பகுதிகள் கொண்டு கட்டப்பட்ட ஆகாய வெடியே சிறந்ததாகுமென் பது கோடார்ட் ஆராய்ச்சிகள் காண்பித்துள்ளன.

ஒவ்வொரு பகுதியும், ஆகாய வெடியின் பிரயாணத்திற்கு உதவி செய்ய உஷ்ண ஆவியை அளிக்கிறது. ஒவ்வொரு பகு தியின் உஷ்ண ஆவியின் அளவு தீர்ந்தவுடன், அவைகள் தானாகவே விழுந்துவிடுகின்றன; இதன் பயனாய் ஆகாய

வெடியின் மீதி பாகத்தின் கனம் இலேசாகிறது. உஷ்ண ஆவியானது ஆகாய வெடி பிரயாணத்தை முடிக்கவும், திரும்பி வரவும், ஆகாய வெடியின் பிரதமப் பகுதியில் போதுமான அளவு வைக்கப்பட்டிருக்கிறது.

ஆகாய வெடி, உஷ்ண ஆவியின் அறைகள், இவைகள் எந்த உலோகங்களில் கட்டப்பட வேண்டுமென்பதைப்பற்றித் தான் தொடர்ந்தாற்போல் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன; ஏனெனின் இந்த உலோகங்கள் யாத்திரையின்போது ஏற்படும் எல்லா நெருக்கடிகளையும் சமாளிக்க வேண்டிய அளவில் இருக்கவேண்டும்.

ஆகாய வெடியின் வேகங்கள், பிரயாணத்தின் கால அளவுகள் இவைகள் எல்லாம் மதிப்பிடப் பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் ஆராய்ந்து, ஆகாய வெடி ஆராய்ச்சியாளர்கள், சந்திர மண்டலத்திற்கு ஆகாய வெடியின் மூல்யமாகச் செல்லும் கால அளவு 48 மணி நேரம் என கணக்கிட்டிருக்கின்றனர்.

ஆகாய வெடிகளை செலுத்தப்படும் ஆராய்ச்சியும் செய்யப்பட்டு வருகிறது. சந்திர மண்டலத்தை சேருவதற்கு, அதற்கப்பால் ஓர் குறிப்பிட்ட இடத்தை அவர்கள் நோக்கிச் செலுத்தவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகாய வெடிகள் செலுத்தப்படும் காரியங்களுக்கு போட்டோ—எலெக்டிரிக் சிறு அறைகள் போன்று புதிய வழிகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன.

ஆகாய வெடியின் வெளி உலகத்தின் விளைவுகளால் கப்பலுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளும் முன் கூட்டியே ஆலோசிக்கப்படுகிறது—அதாவது, விண் வீழ் கொள்ளி, (நட்சத்திரம்) வான சாஸ்திரிகள் கூறும் பூமியின் ஆகாய வெளி எல்லைகளில் உள்ள பிரமாண்டமான காற்றின் அலைகள், இவைகள் எல்லாம் கப்பலை நாசமாக்கவோ அல்லது அது சென்றுகொண்டிருக்கும் பாதையிலிருந்து வேறு திசைக்கு செலுத்தவோ செய்ய முடியும்.

இன்னும் பல்வேறு விளைவுகளையும் சமாளிப்பதற்கு விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். உதாரணமாக ஆகாய வெளிக்கப்பால் ஆகாய வெடி செல்லும்பொழுது, பாரமில்லாதிருப்பதை கப்பற் சிப்பந்திகள் உணருவர்; இதைச் சமாளிப்பதற்காக அவர்கள் கால்களில் காந்தம் கொண்ட பூட்ஸ்கள் கட்டப்பட்டு, அவைகளால் அவர்கள் ஆகாய வெடியின் தகடால் ஆன தரையில் இழுத்து வைத்திருக்கப்படுவர்.

இன்னும் நூற்றுக்கணக்கான கஷ்டங்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்யப்படவேண்டி உள்ளன-உதாரணமாக மர்ம 'காஸ்மிக்' கிரணங்கள் எவ்வாறு பாதிக்கும் என்பதை ஆராயவேண்டி உள்ளது. இந்த கிரணங்கள் பூமியிலேயே ஈயத்தை பல அடிகள் ஊடுருவிப் பாயும் சக்தி உள்ளதென நமக்குத் தெரியும். ஆகாய வெளிக்கப்பால் இவைகளின் சக்தி மிக அதிகமாகவே இருக்கும்.

இந்தக் கஷ்டங்களை எல்லாம் பரிகரிப்பதற்கு உலகம் பூராவும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

என்னால்ட்-பெல்டெரி என்ற பிரெஞ்சு விஞ்ஞானி ஆகாயவெடி யாத்திரை இன்னும் 50 வருடங்களுள் சாத்தியமாகுமென்று கூறுகிறார். ஏராளமான பிரச்சினைகள் சாவதானமாக வேலை செய்யப்பட வேண்டுமெனவும், இவர் கூறுகிறார்.

முதன் முதலாக தபால்கள் எடுத்துப் போகும் ஆகாய வெடிகள் பரீட்சிக்கப்படும். உதாரணமாக பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் மணிக்கு 600 மைல் வேகத்தில் தபால்கள் எடுத்துச் செல்லும் ஆகாய வெடிகள் அனுப்பப்படும்.

இதுவரை தபால்கள் எடுத்துச் செல்லும் ஆகாய வெடி முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தபால்கள் சம்பந்தமான முயற்சி முதலில் வெற்றியளித்த பின்னர், பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் ஆகாய வெடிகள் தானே வரும்.

'நவராத்திரி' அல்லது 9 இரவு மர்மம்.

(கைவல்யம்)

நவராத்திரி என்ற பதம் ஒன்பது இரவு எனப்பொருள்படும். இது புரட்டாசி மாதம் அமாவாசைக்குப் பின் உள்ள நவமியை இறுதியாக உடைய ஒன்பது நாட்கள் பகலிலும் இரவிலும் கொண்டாடப்படும் உற்சவம். இது சில வருஷங்களில் ஐப்பசி மாதத்துள்ளும் போகும். இந்நாட்களின் ஆரம்பத்தில் எல்லோர் வீட்டிலும் அவரவர்கள் நிலைக்கேற்ப பொம்மைகளும் பல கடவுளின் உருவமான படங்களும் வைத்து ஒவ்வொரு சாயங்காலமும் ஒன்பது நாள் வரையிலும் பாட்டு முதலியவை பாடி ஆலாத்தி முதலியவைகளைச்சுற்றி இந்த உற்சவத்தை பெண்கள் கொண்டாடுவது வழக்கம். இதில் புருஷர்கள் கொலு முதலியவைகளைக் கவனியாவிட்டாலும் நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள். வேத பாராயணம், சூரிய நமஸ்காரம், முதலியவைகளை நடத்த பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனர்களை ஏற்படுத்தி இந்த ஒன்பது நாளில் தமது வீடு வேதகோஷத்தால் நிறைந்து மங்களகரமாகும்படியாகச் செய்ய ஆசைப்படுவார்கள். ஆனால் இந்த பார்ப்பானுக்கும் அதிகாரம் படைத்த ராஜாக்களுக்கும் பணம் படைத்த வைசியனுக்கும் மாத்திரமா; மற்றவர்கள் ("சூத்திரர்கள்")பக்தியோடு சுந்தர காண்ட பாராயணம் செய்து முடித்து பார்ப்பானுக்கு சாப்பாடு தக்ஷணை கொடுத்து ஆசீர்வாதம் பெறவேண்டுமாம்.

கொண்டாடும் விதம்.

நவராத்திரியின் கடைசி நாளாகிய நவமி தினத்தில் புருஷர்கள் தமது வீட்டிலிருக்கும் புஸ்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்து காலை முதல் உபவாசமிருந்து சரஸ்வதியைப் பூஜை செய்யவேண்டும். அந்த நவமி அன்றையத் தினமாவது அல்லது அடுத்த தினமாவது தொழிலாளிகள் ஆயுதத்தையுடையவர்கள் ஆகியவர்கள் தங்கள் தங்கள் ஆயுதங்களை வைத்துப் பூஜை செய்வது வழக்கம். அதனாலேயே இந்த பூஜைக்கு ஆயுத

பூஜை என்றொரு பெயரும் உண்டு. இந்த நவராத்திரியை இந்து மதக்காரர்கள் என்று சொல்லப்படுவதிலுள்ள எல்லாப் பிரிவுக் கூரார்களும் கொண்டாடுகிறார்கள். அன்றியும் சிவ விஷ்ணு ஆலயங்களிலும் இதைபெரும் உற்சவமாகவும் கொண்டாடுகிறார்கள். அங்கு அம்மனை அலங்கரித்து அநேக தீப அலங்காரங்கள் செய்து ஒன்பது நாள் இரவும் ஆராதனை நடத்துவார்கள். இந்த வேடிக்கைகளைப் பார்க்கவே அநேகர் மைசூருக்கு போவது வழக்கம். இதனால் கடவுள் ஆராதனை என்னும் தொழிலையுடைய பார்ப்பனரும் இவ்வுற்சவத்தால் தங்களுக்கு இலாபம் இருப்பதால் அவர்களே ஊர் ஊராய் நவராத்திரி உற்சவத்தைப்பற்றி விளம்பரப்படுத்துவார்கள். நிற்க, இதை சைவர், சுமார்த்தர், வைஷ்ணவர், மாத்வர் முதலிய எல்லா மதஸ்தர்களும் கொண்டாடக் காரணமென்றால் கல்வியும் ஆயுதமும் எல்லாருக்கும் பொதுவானதாலும் அதற்கு கற்பிக்கப்பட்ட தேவதையான துர்க்கை, ஸரஸ்வதி, லக்ஷ்மி என்று சொல்லப்பட்டவர்கள் ஒவ்வொரு இந்துவினுடைய தெய்வங்களின் அம்மன்களானதினாலும், இந்து மதஸ்தர்களுக்கெல்லாம் இது சம்மந்தப்படுத்தப்பட்ட புராணக் கதைகளிருப்பதாலுமே துர்க்கை முதலிய அம்மன்களை வைஷ்ணவர்கள் பூசிக்காவிட்டாலும் இது சம்மந்தமான கதைகள் அவர்களிடையுமுண்டு. மற்றவர்கள் சரஸ்வதி பூஜையன்று துர்க்காலக்ஷ்மீ ஸரஸ்வதீப்யோ நம: என்று கூறி பூஜை தொடங்குவார்கள்.

இவ்வுற்சவத்தைப் பற்றிய சைவ ஸ்மார்த்த புராணக் கதை

என்னவென்றால், முன்னொரு காலத்தில் மகிஷாசூரன் என்ற எருமை ரூபமான அசுரனும் அவன் பரிவாரங்களும் விருத்தியாகி கடவுள் வரத்தால் சிறந்த பதவியை அடைந்து உலகை இம்சித்துக்கொண்டிருந்ததால் இந்த கஷ்டம் பொறுக்க முடியாமல் தேவர்கள் பார்வதியிடம் முறையிட, பார்வதி ஒன்பது நாள் சிவபிரானைக் குறித்து தவமிருந்து அவரிடமிருந்து தகுந்த சக்தி பெற்று ஒன்பதாம் நாள் மகிஷாசூரனைக் கொன்று அவன் பரிவாரங்களை நாசம் செய்து சாந்தமடைந்தாள். மகிஷாசூரனைக் கொன்றதினால் பார்வதி தேவிக்கு மகிஷாசூர மர்த்தனி என்கிற பெயரும் வந்தது என்பதாகும். ஆகையால் இந்தக்கதையின் ஆதாரத்தைக்கொண்டு அம்மன் தவமிருந்து விழித்த ஒன்பதாம் நாள் பக்தர்களுக்கு வேண்டிய வரங்கள் கொடுப்பார் என்னும் கருத்தைக் கொண்டே இவர்கள் இந்த உற்சவத்தைக் கொண்டாடுகிறார்கள்.

நம்முடைய உற்சவத்திற்கும் மூட நம்பிக்கைகளுக்கும், புராணக் கதைகளுக்கும் பாமரர்களே பங்காளிகள். படித்தவர்களுக்கு இதில் வயிறு வளர்க்கும் பிரத்தியக்ஷ அனுகூல மிருந்தாலும்கூட, இது போன்ற கதைகளைப் பற்றிய விவகாரங்கள் எழும்போது "தங்களுக்கெல்லாம் வேறு கருத்தே இதில் பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள்" என்று எதற்கும் "தத்துவ" நியாயம் சொல்லுவதுபோல் இதற்கும் ஒரு ரகசிய அர்த்தமுண்டாம். வேத பாராயணம், கோவிலில் நடக்கும் பூஜை, ஆராதனை, ஒன்பது நாளும் பார்ப்பானுக்கு சோறு போடும் சமாராதனை, அம்மன் விழித்த உடன் செய்யும் தானம் முதலியவைகளால் பாமரர்களுக்கு இகலோக சுகம் சித்திக்குமாம், அதனால் மனம் சுத்தப்பட்டு பின்னால் மோக்ஷத்திற்கு செல்வார்களாம். படித்த பண்டிதர்கள் இந்த ஆடம்பரத்தில் சோறும் தெக்ஷணையும் வாங்கிக்கொண்டாலும் அவர்கள் சொல்லும் உள் கருத்தென்னவென்றால் மகிஷாசூரன் அவன் பரிவாரங்கள் முதலியவைகள் என்பதை அஞ்ஞானமாகவும், அதன் காரியங்களாகவும், பார்வதியை சித் சக்தியாகவும், அது பரம்பொருளாகிய ஆத்ம ஸாக்ஷாத்கார விசேடத்தால் அஞ்ஞானத்தை வேறுப்பதாகவும் கொள்ளவேண்டுமாம். "துர்க்கா லக்ஷ்மீ சரஸ்வதீப்யோ நம." என்னும் மந்திரத்தை பாப்பாளிலிருந்து அம்மனையே பிரதானமாகப் பூசிக்கும் சங்கரமடத்து சாஸ்திரிகள் வரையிலும், மக்களிடமிருந்து (கிடைக்கும் வரையிலும்) தங்கள் லௌகிக சுகத்திற்காக கரந்து அவர்களை வேறுக்கிறார்கள். மற்றும் அவர்களது அஞ்ஞானத்தை வேறுப்பதாக தத்துவார்த்தம் சொல்லும் சமய வாதிகளெல்லாம் மகிஷாசூரனிடத்தில் (அதாவது ஆசையில்) மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

வைஷ்ணவ மாத்வர்கள் புராணக்கதை.

முன்னொரு காலத்தில் லக்ஷ்மி தேவி உலகில் அலமேலு மங்கையாக வந்து பரமபத வாசியாகிய விஷ்ணுவான திருப்பதிப் பெருமாளையடைந்து ஆனந்திக்க இந்த ஒன்பது நாள் தவமிருந்தாராம். இதன் முடிவில் அவர் எண்ணம் முற்றுப்பெற விவாகம் பெரிய ஆடம்பரமாக முடிந்ததாம். இந்த விசேடத்தை முன்னிட்டுத்தான் வைணவ மாத்வர்கள் இந்நாளை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்நாட்களில் திருப்பதியில் பிரம்மோற்சவம் நடக்கிறது. பிர்மாவின் பத்தினியான சரஸ்வதியும் இந்தநவராத்திரியில் தன் நாயகனை அடைந்து நிலைபெற தவமிருந்தாள் என்னும் கதையைக்கொண்டு கடைசி மூன்று நாளும் சரஸ்வதிக்கு முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. பத்தாம் நாள் விஜய

தசமியன்று சரஸ்வதி தவம் முடிந்து சந்துஷ்டியாயிருப்பதால் அன்று வாசிப்போருக்கு கல்வி நன்றாக வருமாம். தொழில் செய்கிறவர்கட்கு காரியங்கள் கைகூடி வருமாம்.

இந்தக் கதைகளை நம்பி பக்தியோடு நடக்கும் நம்மைவிட மற்ற தேசங்களிலெல்லாம் சரஸ்வதி (கல்வி) எந்நாளும் திருப்தியோடு கூடின சந்தோஷத்துடன் இருக்கிறாள். நம் தேசத்தில் வருஷத்திற்கு ஒரு நாள்தான் கண்ணைத்திறந்து திருப்திப்படுகிறாள். இதற்கு காரணம் பாப்பானுக்குக் கொடுப்பது சரியாகக் கொடுக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்காகவோ அல்லது பூஜையின் திருப்திக் குறைவாலோ அல்லது நம்மிடம் ஆயிரமாயிர வருஷமாக வாங்கி உண்ட நன்றிகெட்ட குணத்தை மறைப்பதற்காகவோ அல்லது தன் பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தை தன் முதற் பிள்ளைகள் மற்ற பிள்ளைகளுக்கு எங்கே சொல்லி வைத்து விடுவார்களோ என்னும் அஞ்ஞானத்தாலோ என்பதை நாம் அறியோம்.

இன்னுமொரு கதை.

கிரேதாயுகத்தில் சுகேது என்னும் ஒரு அரசன் இருந்ததாகவும் அவன் சத்துருக்களால் அடிபட்டு காட்டையடைந்து காயத்தாலும் பசிப்பிணியாலும் நோய் வாய்ப்பட்டு அவதிப்பட்டதாகவும் அங்கு வந்த அங்கிரஸ் என்னும் ரிஷி அரசன் பெண்ஜாதியான சுவேதி என்பவளுக்கு லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி இவர்கள் செய்த மாதிரி நீயும் தவம் செய்வாய் என்று இந்த பூஜையை உபதேசித்ததாகவும் அவ்வாறே அவள் செய்து அங்கிரஸ் என்னும் புத்திரனும் பிறந்து அவன் சத்துருக்களை ஜெயித்து தகப்பனுக்கு ராஜ்யத்தை வாங்கிக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகின்றது. நவராத்திரிக்கு இன்னும் இதுபோன்ற பல கதைகளுமுண்டு. இடமில்லாததினால் அக்கதைகளை விட்டு விட்டேன்.

கிரேதாயுகம் முதற்கொண்டு இது நாள் பரியந்தம் செய்த பூஜைகளின் மந்திரங்களும் அதைச்செய்த ஜன சமூகங்களும் நம் நாடும் அதை ஏற்றுக்கொண்ட தெய்வங்களும் நூறு நூறு வருஷங்களாக அந்நியர் படை எடுப்பால் அல்லோல கல்லோலப்பட்டு வெள்ளைக்கார மந்திரத்தால் வெளியேற்றப் பட்டிருக்கையில் நமது "சரஸ்வதியும் லக்ஷ்மியும் பார்வதியும்" அவர்களுக்குப் பூஜையும் அதற்காக பாப்பானுக்குப் பணமும், தக்ஷணையும் எதற்கு என்று 'குடி அரசு' கேட்டு விட்டால் சமயவாதியும் சாஸ்திரவாதியும் 'குடி அரசு சமயத்தை அடியோடு தூஷிக்கின்றது' நாஸ்திகம் பேசுகிறது என்று சொல்லி விடுகின்றார்கள் என்றாலும்

படித்த அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்ளும் பட்டதாரி களுக்கும் சையன்சு வாதிகளுக்கும் புத்தியிருக்கின்றதா இல்லையா என்றுதான் கேட்கின்றோம்.

மேலும் விஜய தசமியன்று சிவன் கோயிலில் பரிவேட்டை உற்சவம் என்பதாக ஒன்று நடத்துகின்ற வழக்கமுண்டு. அன்று பகவான் எழுந்தருளி வன்னி மரத்தில் அம்பு போடுவது வழக்கம். வன்னி மரத்தில் நெருப்பிருக்கிறதாம். அதில் அம்பு பாய்ச்சினால் அந்த வேகத்தால் நெருப்புண்டாகி அந்த மரத்தை எரித்து விடுமாம். ஆனதால் வேட்டையாடுவோருக்கும் ராஜாக்களுக்கும் எளிதில் ஜெயத்தைக் கொடுக்குமாம். இந்த காரணத்தால் இந்த வேட்டை தினத்திற்கும் விஜயதசமி அதாவது ஜெயத்தைக் கொடுக்கும் நாள் என்னும் ஒரு பெயர் கொடுக்கப்பட்டது என்றாலும் இதற்கும் உள் கருத்துண்டாம். உள் கருத்து வைத்து வைத்துத்தான் நம் நாடு உள்ளேயே போயிற்று. பாமரர்களுக்கு உள் கருத்து ஸ்தூலமாகவும் படித்தவர்களுக்கு சூட்சுமமாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். (சூட்சுமமும் பாமரர்களைப் படித்தவன் ஏமாற்றவே உபயோகப்படுகிறதே ஒழிய காரியத்திற்கு ஒன்றும் உபயோகப்படுவதில்லை.) அதாவது நெருப்பிடலாகிய வன்னி மரத்தையே ஆத்மாவோடு கூடிய தேகமாகவும் அம்பைஞானமாகவும் வேட்டையில் அம்பு விடுவதை ஞானோபதேசமாகவும் மரம் எரிந்து விழுவதை கரும சம்பந்தமானவைகளை ஞானத் தணல் சுட்டு வெண்ணீறாக்குவதாகவும் கொள்ள வேண்டுமென்பார்கள். இந்த உள் கருத்து உபதேசம் கேட்டுத்தான் ராஜ வம்சமெல்லாம் நடுத்தெருவில் நின்றதான வடதேசத்துக் கதைகள் அநேகம். மைசூர் மகாராஜா பரிவேட்டையாடி ஐதருக்கு அடிமையானார். ஆனால் வெள்ளைக்காரப் பரிவேட்டைதான் அதை விடுவித்துக் கொடுத்தது. தஞ்சாவூர் ராஜா செய்த சரஸ்வதி பூஜையும் ஆடிய பரிவேட்டையும் சரஸ்வதி மாலில் அடுக்கி வைத்த குப்பை கூள ஏடுகளும் ஆயுதங்களும் முன் வாசலில் துளசியைக் கொட்டிவிட்டு புறவடை வாயலில் ராஜாவை ஓடச் செய்துவிட்டன. அதுபோலவே டிப்பு காலத்தில் திருவனந்த புரத்து ராஜாவிற்கு வெள்ளைக்காரர்கள் அபயம் கொடுத்தார்களே ஒழிய, சரஸ்வதி பூசையும் பரிவேட்டையும் ஒன்றும் செய்யவே இல்லை. அந்தப்படி அபயம் கொடுத்திராவிடில் அனந்த சயனப்பிரபுவும் அவர் பெண்சாதியும் அவர் மருமகளும் ஓடிப்போயன்றோ இருக்க வேண்டும்? அனந்த சயனப்பிரபு பின்னும் ஓடிவந்து தங்கள் சொத்தென்று அங்கு சயனித்துக் கொண்டிருப்பதாக இப்பொழுதும் சொல்லுகிறார்

கள்' இந்த பிரத்தியக்ஷ அனுபோகத்தை 'குடி அரசு' சொன்னால் அது கடவுளை தூஷிக்கிற பத்திரிகையாய் விடுகிறது.

கடவுளையும் பெரியவர்களையும் தூஷிக்கிறவர்கள் 'குடி அரசு' காட்டும் ஆதாரங்களையும் அதன் நியாய வாதங்களையும் கூட்டி ஆலோசியுங்கள். அநேக ஆயிர வருடமாக சரஸ்வதி பூஜை செய்யும் நாட்டில் 100-க்கு 3 பேர் கூட படிக்காமலிருப்பதற்கும் சரஸ்வதியே இன்னார் என்று தெரியாத நாட்டில் 100-க்கு 90 பேர் படித்திருப்பதற்கும் காரணமென்ன? நாம் சரஸ்வதிக்கு செய்த தொண்டு சாமானியமல்லவே. ஒரு ஏட்டைக் கிழிக்கோம், ஒரு எழுத்தை மிதியோம், இறைந்து கிடக்கும் இதழில் துப்போம், படித்து முடிந்த பழைய ஏட்டையும் வீசி எறியோம், கால் பட்டால் தொட்டுக் கும்பிடுவோம், கைபட்டால் கண்ணில் ஒத்திக்கொள்ளுவோம், எந்த ஏட்டிற்கும் காப்புச் சொல்லுவோம், செல்லரித்த ஏட்டையும் புண்ணிய தீர்த்தத்தில் கொண்டுபோய் போடுவோமே ஒழிய தெருவில் போடோம், கற்றவர் நாவின் கருத்தும் கம்பன் கவித்திறமும் அவளே என்போம், இத்தனையும் போதாமல் வருஷம் ஒருதரம் பத்து நாள் பள்ளியறையில் வைத்து படைத்துக் கும்பிடவும் செய்கிறோம். இத்தனையும் நாம் இங்கு செய்ய இந்த சரஸ்வதி கொஞ்சமும் நன்றி விசுவாசம் இல்லாமல் மேனாட்டில் குடி புகுந்த காரணமென்ன வென்பதை 'குடி அரசு' சரஸ்வதியையே கேட்கிறது. "ஏ சரஸ்வதி! மேனாட்டில் உனக்கு என்ன மரியாதை இருக்கிறது? உன்னைப் படித்து எறிகிறார்கள், காலில் மிதிக்கிறார்கள், செருப்புக் கட்டுகிறார்கள், மலம் துடைக்கிறார்கள், உன் பேர் சொல்லுவதில்லை, நீ ஒருத்தி இருக்கின்றாய் என்றுகூட நினைப்பதில்லை, உனக்கு பூஜையில்லை, புருஷனில்லை, வீணையில்லை, வெஞ்சாமரம் இல்லை, எல்லா வித்தைக்கும் அவர்கள் தாங்களே எஜமானர்கள் என்கிறார்கள், எனவே நீ செய்வது நியாயமாகுமா என்று நாங்கள் சொல்விட்டால் உன் பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தை எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படாதென்று நீ சொன்னதாகச் சொல்லும் சாஸ்திரிகளே எங்களை நாஸ்திகர்கள் என்று சொல்கிறார்கள். உன் முதற்பிள்ளையான பார்ப்பனர்களின் தாசிப்பிள்ளை,—அடிமை—வேலையாள்—ஒழுக்கமற்றவன்—என்று எங்களில் படித்த உணர்ச்சியற்ற பண்டிதர்களையும் கூட நீ சொல்லியிருப்பதாக உன் முதற்பிள்ளைகள் சொல்லும் ஏட்டைக்கூட கிழித்தெறியாமல் சற்றும் விஸ்வாசமற்றுப் போனாயே என்று நாங்கள் சொல்லிவிட்டால் தூஷித்தவர்களாகி விடுவோமா? நீயே சொல்லு.

நீ வாசம் செய்யும் மேனாட்டில் உனக்கு பூஜையில்லை, நைவேத்தியமில்லை, பூசாரி குருக்களுக்குப் பொங்கற் சோறில்லை, பஞ்சமும் படியாமையுமுடைய இந்நாட்டின் பேரில் மாத்திரம் உனக்கு வந்த வயிற்றெறிச்சல் என்ன? உன் முதற்பிள்ளைகளுக்கெல்லாம் உன் பேராலேயே அளித்தளித்து ஆண்டியானோமே என்று நாங்கள் சொல்லுவதாலேயே உன் பக்த கோடிகள் உன் புருஷனுடைய பிர்மலோகத்திற்கும் உன் மாமனுடைய வைகுண்டத்திற்கும் உன் பாட்டனும் மகனுமான சிவனுடைய கைலாசத்திற்கும் போகும் கதவுகளை நாங்கள் (சமயதூஷணையால்) சாற்றினவர்களாகி விடுகிறோமாம். நீயும் உன் குடும்பத்துப் பெண்களும் குடி போயிருக்கும் நாட்டில் உங்கள் புருஷர்களுக்கு கோவில் கிடையாது, கும்பாபிஷேகமில்லை, அப்படியிருக்க நீங்களில்லாத நாட்டில் உங்களுக்கு கோயிலும் கும்பாபிஷேகமும் பூசையும் எதற்கு? இருக்கிற கோவில்களில் நீங்கள் குடியிருந்தால் போதாதா? காணிக்கையும் நிறுத்தி கும்பாபிஷேகத்தையும் விட்டு கோவிலுக்கெழுதி வைப்பதையும் நிறுத்தி பணத்தையெல்லாம் படிப்பிற்கே வைத்து விட்டுப் போங்களென்றால், பாமரர்களுக்காக ஏற்பாடு செய்து வைத்த சமய ஒழுக்கங்களை யெல்லாம் கெடுத்து மோட்ச வாசலை அடைக்கும் நாசர்களென்று எங்களைராஜீய வாதிகள் கூடச்சொல்லலாமா? ஆச்சாரிகளுக்கும் குருக்களுக்கும் அதைச்சேர்ந்த பாப்பனர்களுக்கும் கொடுப்பதை நிறுத்தி விட்டு பக்கத்து ஏழைக்கு படிப்பும் தொழிலும் கற்பியுங்களென்றால் ஆச்சாரிகளையும் பெரியவர்களையும் நாங்கள் குற்றம் சொல்லுகிறவர்களாகி விடுவோமா?''

ஆயுதபூஜையின் யோக்கியதை.

பட்டகசாலைத் தூணிலிருந்து அம்பட்டன் கத்தி வரையிலும் மேனாட்டிலிருந்து வருவதும் நகம் அறுக்கும்கத்திகூடஐந்தணாவிற்கு வாங்கி அநேகர் கொத்துச் சாவியில் தொங்குகிறதும் போகட்டும். அறுப்பறுக்கும் காலத்தில் அட்டாலையில் கருக்கரிவாள்கூட கவலையற்றுத் தூங்குகிறதே. வருணபகவானுக்கும் சூரிய பகவானுக்கும் ஏற்பட்ட சண்டையால் வருணபகவான் முறியடிக்கப்பட்டு ஓடி மறைந்து விட்டானே. சூரியனே இப்போது கழனியில் உள்ள எல்லாவற்றையும் காய்ந்து தொலைத்து விட்டானே! உன் ஆயுதங்களுக்கு காட்டிலும் கழனியிலும்கூட வேலை இல்லையென்றால் பின்னை கருமார் வீட்டிலும் வேலை என்ன? எனவே வேலையில்லா ஆயுதத்திற்குப்பூஜை ஏன்?

இப்பொழுது மைசூர் ராஜ்யத்தில் நடக்கும் துர்க்கை, லெட்சுமி, சரஸ்வதி முதலியவர்களின் பூஜைகளான, தசராப் பண்டிகைக்குச் செலவாகும் பணத்திற்கு அளவுண்டோ! முன் மைசூர் ராஜா சுயாதிபதியாக அரசாண்ட காலத்தில் சரஸ்வதி பூஜைக்குச் செலவு செய்த பணத்திற்கு அளவும் எல்லையுமிருக்காது. அப்படியிருக்கையில் சங்கராச்சாரியின் மடங்களுக்கெல்லாம் முதன்மையான சாரதாமடம் மைசூரிலென்றும், சங்கராச்சாரி அம்மனை அங்கு பிரதிஷ்டை பண்ணித்தான் பூசித்தாரென்றும், மைசூர் ராஜா குடும்பத்திற்கு அம்மனே குலதெய்வமென்றும், சங்கராச்சாரிகளும் மைசூர் ராஜ குடும்பங்களும் அந்த அம்மனை பூசிக்கையிலும், பண்டிகை கொண்டாடுகையிலும் பிராமண போஜனம், தெக்ஷணை, தானம், வேள்வி எக்யங்களும் செய்து வந்தார்களென்றும், நாம் தெரிந்திருக்கிறோம். அதை சம்பந்தித்து இப்பொழுதும் அநேகம் நடப்பதையும் பார்க்கிறோம். அந்த காலத்தில் மைசூரில் குடி புகுந்திருந்த ஐதாலி என்பவரால் மைசூர் ராஜ்யம் அபகரிக்கப்பட்டு மைசூர் ராஜவம்சமும் துரத்தப்பட்டு சாரதாதேவியும் ஓடி ஒளிந்ததையும் தெரிந்தோம். அதற்குப்பின் வெள்ளக்காரர்களால் மைசூர் ராஜ்யம் ஜெயிக்கப்பட்டு பழய ராஜ பரம்பரைக்குக் கொடுக்கப் பட்டதையும் கண்டோம்.

அது வரையிலும் பார்வதி, சரஸ்வதி, லெட்சுமிக்குச் செய்த பூஜை எல்லாம் என்னவாயிற்று? எங்கே போய்ச் சேர்ந்தது? நம்மிடத்தில் அவர்களிருந்தால் அந்தப் பூஜைகளை ஏற்றுக்கொண்டிருப்பார்களே! அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் அதனால் நாம் பலனும் கண்டிருப்போமே. சங்கராச்சாரிக்கும் அவர்கள் கூட்டத்தாருக்கும் சாரதா தேவிக்கும் போட்ட படையலெல்லாம் தேவர்கள் உண்டது உண்மையானால் நமக்குப் பிரதி பலன் ஒன்றும் காணோமே. பிரத்தியட்சத்தில் நன்றி கெட்ட தேவர்களுக்கு இனிப் போடும் படையலால் நமக்கு என்ன நன்மை வரும்? ஏட்டில் தான் பலன் நீட்டி நீட்டி எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய யுக்திக்கும் அனுபோகத்திற்கும் அநேக காலமாக ஒத்து வருவதில்லையே. யுக்திக்கும் அனுபோகத்திற்கும் ஒத்துவாத சாஸ்திரங்களைத் தள்ளிவிட வேண்டுமென்றல்லவா மனிதனுடைய சிந்தனா சக்தியும் அதைத்தெரிந்த பெரியவர்களும் சொல்லுகிறார்கள். பார்வதிக்குப் பரிந்து வரும் வைணவர்களும் சரஸ்வதிக்குச் சலுகை காட்டும் சமர்த்தர்களும் சற்று கவனித்துப் பார்த்துப்பின் சண்டைக்கு வாருங்கள். சரஸ்வதி பார்வதி இவர்கள் உண்டா? இல்லையா? என்பதல்ல இங்கு வாதம். அவர்களை தூஷிப்பதுமல்ல. "சரஸ்வதி என்றால் அறி

வும், லெட்சுமி என்றால் உலகத்தின் சாமக்கிரிகைகளும், துர்க்கை என்றால் உலகத்தின் நாசமும் ஆகும்" என்பதான அர்த்தங்களையும் நாங்களுமறிவோம் அநேக ஆயிர வருஷங்களாக அவர்கள் பேரைக் காட்டி நாம் செய்துவரும் கிரிகை, சடங்கு, பூஜை, பிராமண போஜனம், தெக்ஷணை, தானம் இவைகளின் பலனென்ன! அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு நமக்குச் செய்த நன்மை என்ன? அவர்கள் அதை ஏற்றிருந்தால் வெள்ளைக்காரர்களின் உதவியால் நம் நாட்டில் அவர்கள் குடியிருக்கக் காரணமென்ன? ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் அதைத் திருத்தி அமைக்க வேண்டாமா? என்பதே இங்குள்ள வாதம்.

இதைப் பின் பற்றிப்பிரபுக்களும் ஜெமீன்தார்களும் சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை கொண்டாடுகிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கும் பார்ப்பான்களுக்கும் வேண்டிய விருந்துகளும் தானங்களும் நடக்கின்றன. இந்த பூஜையைப் பெற்றுக் கொள்ளும் சரஸ்வதி இவர்களுக்கு தன்னுடைய வித்தையையும் அதனால் தன் நாட்டிற்கு வேண்டிய தொழில் முறைகளையும் கற்பிக்காமல் மேனாட்டு பழக்க வழக்கங்களை கற்பித்து அதனால் தங்கள் பொருள்களை மேனாட்டு சாமான்களுக்கு விரையம் செய்யச் செய்து இவர்களை ஏழைகளாக்குவதையே பார்க்கிறோம் வீண் ஆடம்பரங்களுக்கும் சங்கீதப் பாட்டுக் கச்சேரிக்கும் விருந்தின் பெருமைக்கும் விரையம் செய்யும் ஒவ்வொரு வருஷத்துப் பணங்களைக் கொண்டு நான்கு ஏழைப் பையன்களுக்காவது கல்வியும் தொழிலும் கற்பித்தால் சரஸ்வதி திருப்திப்படுவாள் என்பதே நியாயமாகவிருக்கும். உத்தியோகஸ்தர்களோ அநேக பதார்த்தங்களை அளவிற்கு மீறி உண்பதால், நீரழிவு, பாரிச வாய்வு முதலிய ராஜவியாதிகளால் அவதிப்பட நேருமெனப் பயந்து ஆகாரத்தையளந்து பகுத்து உண்ண வேண்டுமெனத் தெரிந்தும் பசித்திருக்க வேண்டுமென நினைத்துக் கொண்டுமிருக்கையில், சரஸ்வதி பூசையைச் சாக்காட்டிச் செய்யும் விருந்தை அம்மன் பிரசாதமென்று அவர்கள் அடியோடு தள்ளாமல் அவ்வளவையும் உண்டுவிட்டால், அவர்கள் மனவிரதத்தைக் கெடுத்தபாவமும் தேகத்தில் வியாதியை உண்டாக்கின பாவமும் யாரைச்சேரும்? சரஸ்வதியை ஒரு நாளும் சேராது. 'அறிவையடைய புத்தியை விசாலப்படுத்திக் கொள்வதற்கு ஏழைகள் பேரில் இரக்கம் வை' என்று சொன்னார்களே ஒழிய விருந்தும் வேடிக்கையும் பிராமண போஜனமும் தெக்ஷணையும் தானமும் கொடுத்து கடன் பட்டு உள்ள புத்தியையும் ஓடவிட்டுவிடச் சொல்லவில்லை. அதிகாரி வீட்டுக் கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மிக் கல்லை உடைக்குமென்பது போல வியாதி அவர்களிடம்

போனாலும் பாவம் அவர்களிடம் போகாது. பணத்தைப் பாழுக்கிறைத்தவன் குடும்பத்தாரே பாவத்திற்கு பட்டினி கிடக்க வேண்டும்.

வைதீகமென்று விருந்துண்ணும் பார்ப்பனர்களோ அளவிற்கு மீறி அள்ளி உண்டு அவதிப்படுகையில் விருந்திலுள்ள பதார்த்தங்களில் பலவற்றைக் குற்றம் சொல்லி எஜமானின் குற்றத்தை எடுத்துக்காட்டி 'வெங்காயம் வெள்ளைப் பூண்டிருந்தால் தோஷமில்லை. பெருங்காயமதிகமில்லாதது பிழையே' என்று தீர்மானம் செய்து தங்களுக்குச் சோடாக் கொடுக்காமல் உத்தியோகஸ்தர்களுக்குச் சோடாக் கொடுப்பதைக் கண்டு சலித்து கோபித்து காரியக்காரனைத் தேடித்திரிந்து லெட்சுமி போரால் அவன் பெருமையைச் சொல்லி பல்லைக்காட்டி சோடாவும் குடித்து, ஈன தரும வழிப் பயனைக் கணக்கின் தீர்ப்புக்கு மறுநாளும் மன்றாடி நின்று கொண்டிருக்கும் சரஸ்வதி பக்தர்களைத் திட்டி ஓட்டுகிறவரையிலும் பார்ப்பானின் வைதீகமும் பணக்கார சரஸ்வதி பூஜை எஜமானின் பக்தியும் முடிவடைவதில்லை. இந்த நிலையில் நாம் செய்யும் சரஸ்வதி பூஜைகளும் என்ன பலனைக் கொடுக்கும் என்பதே இங்கு கேள்வி.

ஜப்பான் சிறிது காலத்திற்கு முன் தங்களூர் மாணவர்களை மேனாட்டிற்கு அனுப்பி சரஸ்வதியைக் கொண்டு வந்து தங்களூரைச் சுத்தம் செய்ய, லெக்ஷ்மி தானே அங்கு குடி ஏறி விட்டாள். துருக்கியோ தனது தேச சரஸ்வதியின் பாஷைகூட உதவாதென்று எழுத்தைக்கூட மாற்றிவிட்டதாகப் பத்திரிகையில் படிக்கிறோம். மேனாடு சுற்றி வந்த ஆப்கன் தேசமோ அநேக மாணவர்களை மேனாடு போய் சரஸ்வதியைக் கூட்டி வர அனுப்பி விட்டது. சரஸ்வதியைக் கூட்டி வரப் போகும் மாணாக்கர்களை முத்தம் கொடுத்தனுப்பினார்களாம். இவர்களன்றோ சரஸ்வதி. சரஸ்வதியின் அன்பும் அங்கல்லவோ விளங்கும். இனி அந்த லெட்சுமியும் ஏன் குடிபோகமாட்டாள்?

நம் தேசத்தில் அவ்வித அன்புடைய சரஸ்வதியுண்டா? ஏட்டிலும் பண்டிதர்களின் கழுத்திற்கு மேற்பட்ட வார்த்தையிலும் இருப்பது காரியத்திற்கு உதவுகிறதா? காரியத்திலிருந்தால் சர்க்கார் உத்திரவு இருந்தும் ஸ்தல அரசாட்சி நமக்கே கொடுக்கப்பட்டும் ஏன் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளியில் சேர்த்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள்? இக்காலத்தில் எல்லா வகையாலும் ஆசைகளும் அவசியங்களும் அதை அடைய விரோதங்களும் வளர்ந்து கொண்டே வருகிறது. சரித்திரத்தில் பாதியுண்மை காட்டுவது போல பொய்களையும் சிருஷ்டி செய்து

நம் நாட்டுத் தாழ்ந்த வகுப்பார்கள் என்று ஒரு பேர் கற்பித்து அவர்களை எப்போதும் இடை விடாமல் பழித்து அவர்களிடம் விரோத எண்ணங்களை வளரச் செய்வதும் பெரும் பகுதி பொய் யும், மனிதப் பொதுநலத்தைக் கருதி விரைவில் மறக்கத்தக்கனவு மாகிய சம்பவங்களுக்கு ஞாபகச்சின்னம் கட்டி நிறுத்துவது போல நமது மதத்தின் கதைகளும், நமது கடவுளின் பேரால் சொல்லும் சமய ஒழுங்குகளும் இருக்கையில் நமக்கு சுயராஜ்யம் அதிக தூரமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

நம்முடைய தத்துவ சாஸ்திரத்தில் மனிதனை இயற்கை மிக வும் நெருக்கமாகப்பின்னி இருப்பதால் ஒருவன் பிறனை அடித் தால் அந்த அடி அவன் மீதும் தவறாமல் திரும்பி விழும் என்பது போல நாம் செய்த பாவம் நம்மேல் திரும்பி வந்திருக்கின்றது. மனிதன் கண்டு பிடித்த உண்மைகளிலே மிகப் பெரியது தரும விதி. அது யாதெனில், மனிதன் பிறருக்குள்ளே தன்னை எவ்வளவு காண்கிறானோ அவ்வளவு உண்மை நிலை அடைகிற னென்ற ஆச்சரியமான சத்தியத்தைக் கண்டு பிடித்த செயல். இதையே பௌத்தரும் சொன்னார். அதுவே அவருடைய தரு மத்திற்கெல்லாம் தலையாய் விளங்கிற்று. இதுவும் வேதசுருதி களிலிருந்தெடுத்தே பௌத்தர் சொன்னார் என்கிற பெருமையை நம் நாடும் கொண்டாடி பெருமையை அடைந்தது. அந்த உண் மை நம்மை விட்டு நழுவிப்போய் குருட்டுத்தனத்தை நம்பி தன் னலத்திற்காகச் செய்யும் எல்லாக் காரியங்களும் தேசபக்தி யென்றும் மதமென்றும் பயிற்சியடைந்து விட்டமையால் தான் சத்தியமூர்த்தி அய்யர் படித்திருந்தும் பல ஊர் சுற்றியும் "12வய திற்கு மேற்பட்டு பெண்களுக்கு விவாகம் செய்தால் நரகத்திற் குப்போகவேண்டுமென்று பாராசரஸ்மிருதி சொல்லுகிறது. 12 வயதிற்கு மேற்பட்டு கலியாணம் செய்யாவிட்டால் ராஜாங் கம் ஜெயிலில் போடுவேன் என்று சொல்லுகிறது. ஜெயி லுக்குப் போவார்களே ஒழிய பார்ப்பனர்கள் நரகத்திற்குப்போக மாட்டார்கள்" என்று சொன்னார். மனிதர்களை வதைத்து துக் கத்திற்காளாக்கி தேசம் நாசமடைவதை நேரில் பார்த்துக் கொண்டு அதற்கு மனமிரங்காமல் வழியிருந்தும் செய்யாமல் ஒன்பது எட்டிவில்லாமல் ஒரு எட்டிலிருக்கும் நரகத்திற்கு பயப் படுவதாகச் சொல்லும் சாஸ்திர பக்தர்களிடம் சுயராஜ்யம் பத்தா யிர வருஷம் ஆனாலும் எப்படி வரும்? வந்தாலும் நியாய மான, சமத்துவமான, எல்லாரையும் விரும்பும் படியான எல்லா

உண்மை.

(P. R. S.)

ஆயிரக்கணக்கான வருஷங்களாக, மனிதன் பசிப்பிணியைப் போக்கிக்கொள்ளவும் தனக்கு வேண்டிய அவசியமான காரியங்களைச் செய்துகொள்ளவும் ஆலோசனை செய்து அறிவை பெருக்கிக்கொண்டான். ஆனால் அறியாமையும், பயமும், தவறுதல்களும் அவனுடைய முன்னேற்றத்தை தடைசெய்தன. அனேக வருஷங்களாக மனிதன் உண்மையைக்காணப் பாடுபடுகிறான் என்றாலும் அவன் பெரிதும் மதக்குருக்கள்களாலும், மதத்தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டே வந்திருக்கிறான். அவன் குருக்கள்களால் முட்டாளானான். பேய் பிசாசுகளால் பயமுறுத்தப்பட்டான். அரசனால் தண்டிக்கப்பட்டான். "கடவுளால்" அடிமை ஆக்கப்பட்டான். கல்வியின் பெயரால் அவனுடைய மனம் அறியாமையில் அழுத்தப்பட்டு இயற்கைக்கு மேற்பட்டதொரு வழியில் செலுத்தப்பட்டது. மதம் அவனுக்கு மூடநம்பிக்கையை

ரிடத்திலும் குடி கொள்ளும் படியான சாஸ்வதியைப் பூசிக்கும் பக்தர்கள் பிடுங்கிக் கொள்ளுவார்கள்.

சாஸ்வதிமாலும் லெட்சுமி விலாசமும் பார்வதி மண்டபமும் கட்டிவைத்த தஞ்சாவூர் மகாராஜா குடும்பம் எங்கே? தப்பித் தவறி சிந்தின அந்த வம்சத்திற்கு ஒரு டிப்டி சூப்பரின்டெண்டெண்டு வேலைக்குக்கூட எவ்வளவு கஷ்டமாகவிருக்கிறது? காரணமென்ன? வீண பூஜைகளும் கோவில் கும்பாபிஷேகமல்லவா! அவர் செய்த பிராமண போஜனமும், தெக்ஷணையும், கோவில் பூசையும் என்ன பலனை அளித்தன? சாஸ்வதி பூஜையின் கொலுவால் அல்லவா நாயுடுகளின் அரசாட்சி தஞ்சாவூரில் ஒழிந்தது? கிளைவும் டூப்ளேயும் எந்த சாஸ்வதியைப் பூசித்தார்கள்? அவர்கள் முயற்சியும் கடமையும் எந்த கஷ்டத்திலும் செய்து முடிக்கும் தைரியமும் இருந்நால் எல்லா லெட்சுமியும் அங்கே வந்து தீர்வார்கள். இதுவே உலக அனுபோகமும் சாஸ்திரத்தின் கருத்துமாகும்.

யும், அகங்காரத்தையும் போதித்து அன்பையும் வெறுப்பையும் அவசியமானதென்று வற்புறுத்தியது.

ஆனால் உலகம் காலப்போக்கில் மாறுதலடைகிறது. நாம் அநாகரிகமான வேத புத்தகங்களையும், அர்த்தமற்ற கோட்பாடுகளையும் வெறுக்கத் தொடங்கிவிட்டோம்.

இத்தகைய நிலைமைக் கிடையிலே உண்மையைக் கண்டு பிடிப்பதைவிட உயர்ந்த காரியம் வேறொன்றுமில்லை.

உண்மையே மனிதர்களுக்கு உதவும் உயர்ந்த செல்வம்.

உண்மையை நாடுவதே உலகத்திலுள்ள வேலைகளி லெல்லாம் யோக்கியமானதும், பயன் தருவதுமாகும்.

உண்மையே முன்னேற்றத்திற்கு முக்கியமான அஸ்திவாரம்; உண்மையே இன்பத்தின் தாய். உண்மையே நம்மை நாகரீகர்களாக்குகிறது. மனிதன் இதயத்தில் இருக்கும் அதி உயர்ந்த ஆசைகளில் முதன்மையானது உண்மையை அறிந்து கொள்வதுதான். உண்மை மனிதனுக்கு அளவற்ற சக்தியைக் கொடுக்கிறது. மனிதனைக் காப்பாற்றும் கத்தியும் கேடயமும் உண்மையேயாகும். உண்மையை அறிந்த மனிதன் உலகத்தை சீர்திருத்துகிறான்.

ஆலோசனையாலும், அனுபவ ஆராய்ச்சியாலும்தான் உண்மையைக் காணமுடியும். மனிதன் தன்னாலியன்ற மட்டும் ஆராய அனுமதிக்கப் படவேண்டும். ஒவ்வொன்றும் அவனுக்குத் துணைசெய்ய வேண்டுமேயல்லாது ஒன்றும் அவனைத் தடைசெய்யலாகாது. அறிந்து கொள்ள முடியாத விஷயம் ஒன்றும் இருக்கக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே ஆராய்ச்சி செய்யவும் தனது உள்ளத்தில் பட்டதை வெளியிடவும் அநுமதிக்கப்படவேண்டும்.

எவனொருவன் ஆராய்பவனை பயமுறுத்துகிறானோ அவன் ஜன சமூகத்துக்கு விரோதி.

மனிதனிடமிருந்தும் "கடவு"ளிடமிருந்தும் சுதந்தரம் பெற்றால்தான் நாம் எந்த உண்மையையும், ஆராய முடியும். ஒவ்வொரு மனிதனும் முதலில் தனக்குத்தானே உண்மையாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது மன

மார ஆராய்ச்சியில் இறங்கி உலகிலுள்ள பல்வேறு கொள்கைகளையும் ஆராயவேண்டும். அவன் ஆராய்ந்தறிந்த உண்மையே அவனுக்கு வழிகாட்டியாகவுமிருக்க வேண்டும்.

உண்மையை நேசிப்பதே உன்னதமான குணம், உண்மையை நேசிப்பதே மனுஷத்தன்மையாகும், உண்மையை நேசிப்பதே விடுதலை அடைவதற்கான ஒரு சிறந்த வழியாகும். உண்மைக்கு அடிமைப்படுவதே சுதந்தரத்துக்கு வழி காட்டுவதாகும். கோவில்களுக்கும், குருக்கள்களுக்கும், "கடவுள்"களுக்கும் பயப்படுவது அடிமையாவதற்கு வழி தேடுவதாகும். ஆகவே ஆராய்வது ஒவ்வொருவருக்கும் அவசியமாயிருப்பதோடு, அது அவர்களின் கடமையாகவுமிருக்கிறது. ஆராய்ச்சியை அவன் பொன்னேபோல் போற்றவேண்டும். விருப்பு வெறுப்பற்ற தன்மையில் இருந்துகொண்டு அவன் ஆராயவேண்டும். உண்மையை கண்டுபிடிப்பதே அவனுடைய முக்கியமான நோக்கமாகவிருக்க வேண்டும். ஆலோசித்து பார்ப்பானானால் உண்மை தவறான வழியில் செல்லாதென்பதை அவன் அறிந்து கொள்வான். அவன் பழமை என்பதற்காகவோ, பழக்கம் என்பதற்காகவோ ஒன்றுக்கும் கவலைப்படக்கூடாது. அறிவிற் பட்டதை யன்றி வேறொன்றையும் அவன் நம்பக்கூடாது. அவனுடைய உலகத்தில் அவன் அதிபதியாயிருக்க வேண்டும். அவனுடைய அரசாங்கத்திலிருந்து அவன் பேய் பிசாசுகளையும், கடவுளையும் விரட்டியடிக்க வேண்டும்.

அகங்காரம், ஆணவம், வெறுப்பு, பயம் ஆகியவைகளெல்லாம் உண்மையின் விரோதிகள். உண்மையாக ஆராய்பவன், பழமையான தென்பதற்காகவே பழமையைப் போற்ற மாட்டான். புதுமையான தென்பதற்காகவே புதுமையை வெறுக்கமாட்டான். இறந்துபோய் விட்டார்களென்பதற்காக அவன் அவர்களின் கொள்கையை போற்றமாட்டான். உயிருடன் இருக்கிறார்களென்பதற்காக அவன் இவர்களின் கொள்கையை வெறுக்கமாட்டான். கருத்தை நோக்குவானேயல்லாது அவன் கர்த்தாவைக் கவனிக்கமாட்டான். உண்மையற்றவர்களுக்குத் தான் வெளி வேஷம் வேண்டும். உண்மையற்றவைகளுக்குத்தான் உலகத்தில் மெஜாரட்டி வேண்டும். உண்மையான ஒருவனுக்கு உள்ளதை ஒளிக்காமல் சொல்லுகிறவனுக்கு உலகத்தில் மெஜாரட்டி இருப்பதுமில்லை. அவர் உண்மைகளை அறிஞர்களும் யோக்கியர்களும் அனுசரிக்கிறார்கள். ஏனெனில் அதைவிட வேறொரு வழி அவர்களுக்

கில்லை. ஒவ்வொரு துறையிலும் மனிதன் உண்மையையே நாடுகிறான். இறந்த காலத்தில் நடந்த தவறுகளை எதிர் காலத்தில் நடவாமல் தடுப்பதற்காக ஒரு அரசியல் வாதி உலக சரித்திரத்தை வாசிக்கிறான். ஏனெனில் அவனுடைய தேசத்தைக் காப்பாற்ற அவன் உலக உண்மையை அறிந்துகொள்ள நாடுகிறான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய உண்மையான எண்ணங்களை வெளியிட தைரியமிருக்கவேண்டும். இவ்வித தைரியமே ஒருவனை உண்மைத் தியாகியாக்குகின்றது. யார் உண்மையான எண்ணங்களை வெளியிடாமல் தடுக்கின்றார்களோ அவர்கள் உண்மைக்கும் நாகரிகத்துக்கும் விரோதமானவர்கள். தனது எண்ணத்தை மட்டும் வெளியிடுவதில் சுதந்தரம் கொண்டாடி அச்சுதந்தரத்தை பிறருக்கு மறுப்பானாகில் அவனைவிட அயோக்கியன் வேறொருவருமில்லை. சில கொள்கைகள் தெய்வீகம் பொருந்தியவை யென்றும் அவைகளை ஆராய மனிதனுக்கு உரிமை இல்லையென்றும் சொல்லுவது சரியல்ல. அவைகள் தெய்வீகம் பொருந்தியதென்பதை அவர்கள் எவ்வாறு அறிந்தார்கள்? அநேக ஆண்டுகளாக பேச்சு சுதந்தரம் "கடவுளுக்கு" இன்னலை விளைத்து வருவதாய் காணப்பட்டது. அக்காலத்தில் உண்மையைச் சொல்லுவதை விட பெருங்குற்றம் வேறொன்றுமில்லை. அநேக வருஷங்களாக அறிஞர்களின்வாய் அடைபட்டிருந்தது. ஆண்மையுடன் ஒளிவீசிக்கிளம்பிய உண்மை இயக்கம் இரத்தக்களரினால் அடக்கி ஒடுக்கப்பட்டது. உண்மை சுதந்தரத்தை நாடுகிறது. உண்மை எப்பொழுதும் எதையும் ஆராய்ந்தறியச் சொல்லுகிறது. சுதந்தரம் ஆராய்ச்சி ஆகிய இவைகளின் உதவியால் தான் உண்மை நிலை நிற்கிறது. உண்மை களங்கமற்ற தன்மையையே விரும்புகிறது. உண்மை அகங்காரத்தையும் ஆணவத்தையும் அடக்கி அறிவின் ஆராய்ச்சியைப் பெருக்குகிறது. உண்மை மனிதனை ஒளிந்து வாழச் சொல்லவில்லை. உண்மை அறியாதவர்களின் வணக்கத்தையும் பயந்தவர்களின் பிரார்த்தனையையும் விரும்பவில்லை. உண்மை ஒவ்வொருவருக்கும்

"ஆராய்ந்து பார்" என்று சொல்லுகிறது. இயற்கை அனுபவிக்கும் சுதந்தரத்தை நீங்கள் அனுபவியுங்கள். உண்மையை வெளியிடும்படியான உயர்வுத் தன்மையை அடையுங்கள்.

நாம் ஏன் உண்மையைப் பின்பற்றவேண்டும்? நாம் எதற்காக ஆராய வேண்டும்? நாம் ஏன் யோக்கியனாக விருக்க வேண்டும்? நாம் எதற்காக உண்மையான எண்ணங்களை ஒளிக்காமல் வெளியிட வேண்டும்? இவைகளுக்கு நாம் ஒரு பதில் தான் கூற முடியும். ஜன சமூகத்தின் நன்மைக்காகவே; அறிவு விருத்தியடையவே.

இத்தகைய வழிகளால் மனிதன் இயற்கையை வெல்ல முடியும், பிணியைப் போக்க முடியும், துன்பத்தை நீக்க முடியும், இவ்வுலக வாழ்க்கையை இன்பமானதாகச் செய்ய முடியும். குடியிருக்க வீடும், உடுக்க ஆடையும், உண்ண உணவும் அனுபவிக்க சுகபோகங்களும் ஒவ்வொருவருக்கும் குறைவற ஏற்றத்தாழ்வறக் கொடுக்க முடியும்.

இத்தகைய வழிகளால் குற்றங்களையும் குறைகளையும் உலகத்தை விட்டு விரட்டி விடலாம். பயமாகிய பேயையும், மூட நம்பிக்கையாகிய பிசாசையும் உலகத்தை விட்டகற்றி விடலாம். ஒவ்வொரு மனிதனையும் அறிவுள்ளவனாகவும், யோக்கியமுள்ளவனாகவும் செய்து விடலாம்.

"கடவுள்" தானாகவே தனது சிம்மாசனத்திலிருந்து இறங்கி விடுவார். நரகம் என்பதே இல்லாதொழிந்து போகும். வேஷதாரிகளெல்லாம் உண்மையானவர்களாகி விடுவார்கள். மதம் பயத்தை பரப்பாது; பொய் நல்ல குணமாக விருக்காது. தெய்வீகம் பொருந்திய செயல்கள் ஒன்றுமிருக்காது. ஒவ்வொரு மனிதனும் கடவுளாகிய கல்லையும் உணர முடியாத பொருளையும் நேசிப்பதைவிட உயிருள்ள மனிதனை நேசிக்கத் தொடங்குவான். இவ்வுலக வாழ்க்கைக்காகவே மனிதன் ஒவ்வொரு செயலையும் செய்வான்.

சுதந்தரத்துக்கு விரோதமாகப் பேசப்படும் பேச்சும் சுயமரியாதைக்கு விரோதமாக செய்யப்படும் தர்க்கமும் ஓடி ஒளியும்.

முடிசூட்டு விழா.

(தோழர் சேப்மேன் கோபன் லண்டன் பிரிதிங்கரில் எழுதுகிறார்)

கடவுள் ராஜனை காக்கிறார்.

அநேகர் வெஸ்ட் மினிஸ்டர் அபியில் "நடைபெறும் முடிசூட்டு விழாவைக் குறித்து பிரமாதமாக நினைத்து வருகிறார்கள். அச்சடங்குதான் கிரேட் பிரிட்டனின் அரசனுக்கு புதிய சக்தியை உண்டுபண்ணுகிறதென்றும் கருதி வருகிறார்கள். அவ்வாறு கருதுவது அறியாமையேயாகும். அச்சடங்குக்கும் அரசனது ஒழுக்கத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அப்படியிருப்பதாக யாராவது நினைத்தால் அது பிசகு. அரசனது ஒழுக்கம் எப்படியிருந்தாலும் சரியே. விரும்பத்தக்கதாயினும் விரும்பத்தகாததாயினும் சரியே. பழைய மன்னன் இறந்த உடனேயோ அல்லது முடி துறந்த உடனேயோ இவன் புதிய மன்னனாகத் தோன்றி விடுகிறான். சிம்மாசனம் ஏறின உடன் செய்யவேண்டிய பிரமாணத்தை செய்த உடன் சட்டப்படி பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மன்னனாய் விடுகிறான்.

இப்பொழுது வசிக்கிற மக்களுக்கு அதில் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. பார்லிமெண்டும் ஒன்றும் செய்ய முடியாது. ஒருவன் மறிக்க மற்றவன் தானாகவே தோன்றி விடுகிறான். அதில் பார்லிமெண்டோ, மந்திரியோ, ஆர்ச்சு பிஷப்போ, அல்லது மக்களோ செய்யவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. ஐந்தாம் ஜியார்ஜ் முடிசாய்ந்தஉடன் எட்டாம் எட்வர்டு முடி ஏற்றார். எட்டாம் எட்வர்டு முடிதுறந்த உடன் ஆறாம ஜியார்ஜ் முடிதாங்கினார். சிம்மாசனம் ஒருபொழுதும் காலியாயிருந்ததேயில்லை. நாடு அரசனை இழந்து இருந்ததுமில்லை. சிம்மாசனமேறும்போது செய்கிற பிரமாணத்தால் மன்னனாய் விடுகிறான். ஆகவே மன்னனை மன்னனாக்குகிறதென்றோ, அல்லது ஒழுக்கத்தை மாற்றுகிறதென்றோ இம் முடிசூட்டுவிழாவைச் சொல்வதற்கில்லை. இப்பொழுது முடிசூட்டுவிழாகடவாதிருந்தால் ஆறாம் ஜியார்ஜ் மன்னனாயில்

F—3.

லாமல் போய்விடுவாரா? ஒரு நாளும் இல்லை. பின்னால் சொல்லப்போவதை அறிந்து கொள்ள நான் இதுவரை கூறியவைகளை மனதிலிருத்திக்கொள்ள வேண்டும்.

ஜனநாயக தத்துவப் பிரகாரம் சொல்ல வேண்டுமானால் மன்னர் இன்று வாழ்கிற மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர் என்று சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன். இந்த மன்னரும் சரி, இதற்கு முன் இருந்த அல்லது இனி இருக்கப்போகிற மன்னரானாலும் சரியே. அவ்வப்போது மக்களால் தெரிந்தெடுக்கப் படுபவரல்ல.

1688-ம் ஆண்டில் வாழ்ந்த நமது மூதாதைகள் 1937 ம் வருஷத்தில் யார் மன்னனாயிருக்க வேண்டு மென்பதை நிர்ணயம் செய்து வைத்து விட்டார்கள்.

1637 ம் வருஷத்திற்கு பின் வாழ்கிற மக்களுக்கும் அரசனை தெரிந்தெடுப்பதற்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. நீதி, நெறி, ஒழுக்கம், திறமை முதலியவைகளையுடைய ஒரு அரசனை தெரிந்தெடுக்கும் பொறுப்பிலிருந்து நம்மை நம் மூதாதைகள் விடுதலை செய்து விட்டார்கள். யாரை மன்னனாகத் தெரிந்தெடுக்க வேண்டும், யாரை அப்பதவியிலிருக்கச் செய்யவேண்டும் என்பது அவர்களுக்கு மிக முக்கியமான விஷயமாய் தோன்றியிருந்தது போலும். எட்டாம் எட்வர்டுக்கு என்ன மரியாதை செய்து வந்தோமோ அதே மரியாதை களை இன்று ஆறாம் ஜியார்ஜுக்கும் செலுத்தி வருகிறோம். ஏனெனில் அவ்வாறு அந்த மூதாதைகள் செய்து வைத்துவிட்டார்கள்.

வீதியில் உள்ள அசுத்தங்களை அப்புறப்படுத்தும் விதிகளை சட்டமாக்க எந்த சர்க்காராவது இந்த நாகரிகம் வாய்ந்த நாளில் பிரியப்படுமா? அப்படியிருக்க, பெரிய சாம்ராஜ்யத்தின் பொறுப்பையேற்று நடத்தும் மன்னனை தெரிந்தெடுப்பதில் சிறிதும் பொறுப்பில்லாமல் சட்டம் இயற்றிய 1686-ம் ஆண்டின் மூதாதைகளின் அறிவை என்னென்று சொல்வது? இந்த மாதிரியான முன்யோசனை நுண்ணறிவு நமது மூதாதைகளிடமிருந்ததினால் தான் நாம் உலகத்திலேயே சிறந்தவர்களாயும், நமது தேசம் சிறந்த தேசமாயும், நாம் சிறந்த நீதிமான்களாயும் வாழ்கிறோம் போலும்.

முடிசூட்டு விழா.

ஒரு அரசனை தெரிந்தெடுப்பதற்கோ அல்லது அங்கீகாரம் செய்வதற்கோ இந்த முடி சூட்டுவிழாவிற்கு யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதை நாம் இதிலிருந்து அறிந்து கொண்டோம். சரியாகச் சொல்லவேண்டுமானால், இப்பொழுதிருக்கிற மன்னன் மக்களின் பிரதிநிதி என்று சொல்வதற்கில்லை. இப்பொழுதிருக்கிற மக்களின் பிரதிநிதியல்ல அரசன். அந்த நாளைய மக்களின் பிரதிநிதி யென்றே சொல்ல வேண்டும். நம்முடைய கடமை அவருக்கு விசுவாசமாயிருப்பதே யாகும்.

சாம்ராஜ்யத்தின் அதிபதியாக அரசனை ஆக்குவதில் வெஸ்ட் மினிஸ்டர் அபி சடங்கு ஒரு சக்தியையோ-அல்லது நிலையையோ உண்டுபண்ணுவதில்லை. இம் முடிசூட்டு விழாவிற்காக ஆர்ச்பிஷப்புகளும் பிஷப்புகளும் இவ்வளவு கவலை எடுத்துக்கொண்டு பணியாற்றுவது மாயமே தவிர வேறொன்றுமில்லை என்பது நமக்கு நன்குவிளங்கும். அவ்விழா நடைபெறுகிற வரையில் மன்னன் சாதாரண மனிதன் தான். ஆனால் அவ்விழாவிற்கு பிறகு கடவுள் தன்மை பெற்று விடுகிறானாம். இதுதான் முடி சூட்டுவிழாவின் ரகசியம். இது பாதிரிகளின் சூழ்ச்சியே தவிர இதில் விசேஷமான விசேடம் ஒன்று மில்லை. இதில் குருமார்களுக்கு சில விசேஷ உரிமைகள் இருந்து வருகிறதைத் தவிர வேறொன்று மில்லை. இச்சடங்குகளுக்கு அர்த்தமே யில்லை. ஆதிகாலத்தில் மக்கள் அநாகரிகர்களாயிருந்த காலத்தில் நடந்துவந்த வழக்கங்களே இன்றும் நடைபெற்று வருகின்றன.

சில நூற்றாண்டுகளுக்கு முன், நமது தேசத்திலே எந்த ராஜ குடும்பத்தினரையும் விட அதிக சிறப்புப் பெறாமல் இருந்த இந்த ராஜ குடும்பம் இன்று இவ்வளவு "தெய்வீக" சக்தி பொருந்தியதாகக் கருதப்படுவதற்கு என்ன காரணம் என்பது விளங்கவில்லை. இப்பொழுது வின்சர் வம்சம் என்றழைக்கப்படுகிற ப்ரன்ஸ்விக் வம்சத்தினர்களைவிட எவ்வகையிலும் இதற்கு முன்னிருந்த வம்சத்தவர்கள் குறைவு பட்டவர்கள் என்று சொல்லுவதற்கில்லை.

முதலாவது ஜியார்ஜ் முதற்கொண்டு 4 வது வில்லியம் வரை ஒரு மன்னராவது பொது ஜன மதிப்புக்கும் கண்ணியத்துக்கும் பாத்திரராயிருந்ததில்லை. அவர்களைக் குறித்த புத்தகங்களும் வண்டி வண்டியாய் குவிந்து கிடக்கின்றன.

முதலாம் ஜியார்ஜ் ஆங்கிலம் பேச ஆற்றலில்லாதவர். தன்னைவிட முதிர்ந்த பெண்களையும் தாதிகளையும் நத்தித் திரிந்த காமி. 2-வது 3-வது 4-வது ஜியார்ஜ்களோ 4-வது வில்லியமோ பொது மக்களால் ஒரு நாளும் மதிக்கப்பட வில்லை. பொது மக்களின் வோட்டுகள் பெற ஏற்பாடு செய்திருந்தால் இவர்கள் ஒரு வோட்டுக்கூட பெற்றிருக்க மாட்டார்கள். அதற்கு பதிலாக ஸ்டூவர்ட்டு வம்ஸத்தவர்களே திரும்ப அழைக்கப்பட்டிருப்பார்கள். இங்கிலீஷ் மக்களின் அன்பிற்கும் கௌரவத்திற்கும் பாத்திரர்களாய் விளங்கியவர்கள் 2-வது சார்லசும் 3-வது வில்லியமுமே யாவார்கள்.

இம்மன்னர்களைக் குறித்து வர்ணித்திருக்கும் கார்னேஷன் கமெண்டரி ஆசிரியர் எழுதியிருப்பதாவது:—

"அவர்களை நாடு வெறுத்தது. அவர்களுடைய பேராசைக்கும், பொருளாசைக்கும், கடனுக்கும், துன்மார்க்கத்துக்கும், இழிவான மார்க்கத்துக்கும் ஏழை மக்கள், துன்பப்படுகிற மக்கள் வயிற்றுக் கஞ்சியில்லாமல் வரி கொடுத்துத் தீரவேண்டியிருக்கிறது. "அரசியல் கோமகன்கள் தங்களை இழிவு படுத்திக்கொண்டதல்லாமல் இங்கிலாந்தின் கண்ணியத்தையும் தாழ்வுபடுத்திவிட்டார்கள்" என்று வெல்லிங்டன் கோமகனார் கூறியிருக்கிறார். "இவர்கள் சர்க்காரின் பெரிய பாரமாயிருக்கிறார்கள்" என்றும் அவர் கூறியிருக்கிறார். சாதாரண மக்களுக்கு, நவீன மனப் பான்மையுடைய மக்களுக்கு ராஜவிசுவாசம் என்றால் எட்டிக் காயாகச் செய்து விட்டார்கள். ராஜ பக்தியென்றால் அடக்கு முறை, கொடுமை, பலாத்காரம், மிருகத் தன்மை என்றெல்லாம் நினைக்கும்படி செய்து விட்டார்கள்."

இதற்கு மாறாக வேல்ஸ் இளவரசர் ரக்ஷிக்கும் தன்மையை பெற்றிருந்தார்; யார்க்கோமகனார் வீரத்தைப் பெற்றிருந்தார். கிளேரன்ஸ் கோமகனாரும், கெண்ட் கோமகனாரும் நல்ல குணத்தைப் பெற்றிருந்தனர்; ஒற்றைக் கண்ணன், மீசையழகனாகிய கொரூர கம்பர்லாந்து கோமகனாரும் திறமையாளியாயிருந்தார். இவர்கள் எல்லாம் இங்கிலீஷ்காரர்கள் கண்களுக்கு நல்லவர்களாகத் தோன்றவில்லை. திருடர்களாகவும், வாயாடிகளாகவும், அயோக்கியர்களாகவும், வெறியர்களாகவும், தூர்த்தர்களாகவும் இவர்கள் கண்களுக்குத் தோன்றலாயினர். நான்காம் ஜியார்ஜ் மன்னரைச் சற்று பாருங்கள்.

ஹானோ வீரிய வம்சத்தவர்களில் இவரைப் போன்ற கோழை ஒருவருமே இருந்ததில்லை என்று சொல்லலாம். ஆனால் ஐரோப்பாவில் இவரைத்தான் பெரிய கண்ணியம் வாய்ந்தவராகக் கருதினார்கள். இவர் தன்னை கௌரவித்துக் கொள்ளுவதற்காக வரிப்பணத்தை லக்ஷக் கணக்காக சூறையாடினார். அவர் கொழுப்பு அவர் கண்ணை மூடியிருந்தது. அவர் ஒரு பொய்யர், பேராசையுடையவர், குடிகாரர். அவர் எல்லாராலும் வெறுக்கப்பட்டார். அவர் ஒரு துடைநடுங்கி. தனது மனைவியைக் கண்டால் அஞ்சக்கூடியவர்.

அப்படியிருந்தும் நான்காம் ஜியார்ஜுக்கு சிம்மாசனம் இடங்கொடுத்தது. மன்னனாக மகுடம் சூட்டப்பட்டார், போற்றப்பட்டார். அண்ணனுக்குத் தம்பி தப்பாது தோன்றினான் என்பதுபோல் அவரது தம்பி 4-வது வில்லியம் மக்களின் அன்பிற்கு அருகரல்ல. முட்டாள்களின் உறவாளர். தன் தப்பான தசபுத்திரர்களின் நேசத்திலேமூழ்கியிருந்தார். அவருடைய அரைகுறையான பேச்சு மந்திரிகளை திக்குமுக்காடச் செய்தது. நாட்டுக்கு பரிகாசமாயிருந்தது. இவருக்குப்பின் கம்பர்லாந்து கோமகன் அரசனாயிருந்திருப்பார். ஆனால் காளான் மாதிரி திடீரென பில்லி என்ற அரசன் தோன்றி தனக்குத்தான் அரசுரிமை என்று வாதாடத் தொடங்கினான்.

இதனால் இவர்களிருவருக்குமில்லாமல் விக்டோரியாவுக்குப் பட்டம் கிடைத்தது. ஆரம்பத்தில் இவள் பட்டத்தை தாங்கக்கூடியவளாக கருதப்படவில்லை. அவள் மிக இளமையாயிருந்ததால் அவள் மீது ஒருவித குற்றமுமில்லாதிருந்தது. இவளது ஆட்சி ஆரம்பமானது முதல் இவளுக்கு முதற்கவலை தனது 5 மூதாதைகளும் பெற்ற பழிப்புகளை போக்கவேண்டும் என்பதாகும்.

இவளிடத்தில் அறியக்கூடிய சிறப்பு பட்டத்துக்கு வரும் போது மிகவும் எளியவளாயிருந்தவள் மறிக்கும் போது ஐரோப்பாவிலே ஒரு செல்வபதியாய் விளங்கியதே யாகும். இதுவரை மன்னனுக்குத் தெய்வத் தன்மை கற்பிக்கப்படவில்லை. விக்டோரியா ராணிக்குக் கூட தெய்வத் தன்மையை கற்பிக்கவில்லை.

மகுடாபிஷேகம் என்பது ஆதி காலத்தில் தலைவனைத் தெரிந்தெடுக்கும் சடங்கே யாகும்.

அந்தச் சடங்கு தான் இன்றும் பழக்கத்திலிருந்து வருகிறது. கருத்துகள் எல்லாம் ஒன்று தான். செலவு வகைகள்

ஆன்ம கற்பனையும் பில்லி சூனியமும்.

(தோழர் எம். சிங்காரவேலு எழுதுவது.)

சூனியம் வைத்தல் என்ற வித்தையை (Art) சற்று விசாரிப்போம். இந்த வித்தையை மாரண வித்தை என்பார்கள். அதாவது ஒருவனை அழித்துவிடுதற்குரிய வித்தை என்று சொல்லலாம். பழக்கத்தில் சூனியம் வைத்து ஒருவனை "எடுத்து விடுதல்" என்றும் சொல்லுவார்கள். அகால நோய் ஒருவனுக்கு வந்தால் அந்த நோயைச் சூனியத்தால் ஏவ விடப்பட்டதென்பார். சில நாளைக்கு முன்பு சூனியம் வைப்பதற்கு முயன்ற கூட்டத்தாரை கிராம அதிகாரிகள் கைப்பிடியாகப் பிடித்த காலையில் அந்த இடத்தில் நடந்த சம்பவத்தை சற்று விளக்குவோம். திருவான்மியூர் என்ற கிராமத்தில் பலகை வாராவதிக்கு அருகில் இரண்டு பங்காளிகளுக்குள் மனவருத்தம் நேரிட்டு, ஒரு பங்காளி இன்னொரு பங்காளிக்கு சூனியம் வைத்துவிடச் சில சூனியக்காரர்களை வரவழைத்து அடுத்த தோட்டத்தில் சில சூனியத்திற்கு வேண்டிய கிரிகைகள் நடந்தனவாம். அவையாவன:- சுடுகாட்டிலிருந்து கொண்டுவந்த சில எலும்புகள், முக்கியமாக பெருவிரல்கள், ஓணான் தலைகள், ஆட்டு இறைச்சி, கோழி இரத்தம், தேரை (ஓர் வித தவளைவகை) மஞ்சள், குங்குமம்,

---

தான் அதிகரித்திருக்கிறது. இவ்வழக்கம் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான வருடங்களாக நடைபெற்று வந்திருக்கிறது. இனியும் இவ்வாறே நடந்துகொண்டு தான் போகும். பட்டாடைகளும், வைரங்களும், தங்காசனங்களுமே இன்று வித்தியாசமாகத் தோன்றலாம். அன்று எப்படி மழை உண்டுபண்ணுவதற்காகவும், நாட்டை செழிப்பிக்கவும், யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காகவும் முடி சூட்டப் படுகிறது என்ற எண்ணமிருந்ததோ அதே எண்ணத்தோடுதான் இன்று வெஸ்டு மினிஸ்டர் அபியிலும் கார்னேஷன் நடைபெற்றது.

தேங்காய், பழம், அழுக்கடைந்த கந்தைத் துணி, இன்னுஞ் சில வஸ்துக்கள் அங்கு கிடந்தனவாம். இவைகளைக் கொண்டு மந்திர ஜபம் செய்ய எத்தனித்தகாலை எதிரி இதனை அழித்துவிட்டதாக வதந்தி. இந்த அழுக்கான வஸ்துக்களைக்கொண்டு (Filthy things) சில மந்திரங்களை உச்சாடனம் செய்து (அதாவது) விளங்காத அர்த்தமில்லாத சொற்களைச்சொல்லி, எந்த ஆன்மாவையோ எழுப்புவதாக எண்ணி நாயை உசுப்பிவிடும் மாதிரியாக எழுப்பிய ஆன்மாவையோ, பிசாசையோ, குட்டிச்சாத்தானையோ, எதிரியின் பேரில் விடுவதாக உத்தேசித்துக் கொண்டு பூஜையை நிறைவேற்றுகின்றார்கள். இந்த வித்தையில் நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அது யாதெனில் ஆதிமுதல் அந்தம் வரை, எல்லாம் கற்பனைகளே. மந்திரங்களும், கற்பனை (Dirty things) அசங்கித வஸ்துக்களைக் கொண்டு பூதமோ, பிசாசோ, கன்னிகையோ, குட்டிச்சாத்தானையோ எழுப்புவதும் கற்பனை. அவைகள் மூலமாக எதிரியை கொல்ல நினைப்பதும் கற்பனை. கற்பனா "ஆன்மாக்களால்" நோய் உண்டாக்குவதும் கற்பனை. இந்தக் கற்பனைகள் ஒன்றோடொன்று கோர்க்கப்பட்டு அவைகளிலிருந்து விளையும் வினைகளைக் கண்டால் மூட கற்பனைகளின் ஆதிக்கமே ஆதிக்கம்! உலகம் கற்பனைகளாலேயே மயங்கி வருந்துகின்றது.

சூனியம் வைத்தல் என்பது புராதனமான வித்தை என்னலாம். யஜுர் (Yajur veda) வேதத்தில் இந்த கற்பனையைக்காணலாம். அசங்கித வஸ்துக்களால் பிசாசுகளை வசப்படுத்தலாமென்ற கோரிக்கை ஒரு காலத்தில் உலக முழுமையுமே பரவி இருந்தது. ஷேக்ஸ்பியர் (Shakespear) என்ற பிரபல ஆங்கில நாடகக்கவி மாக்பத் (Macbeth) என்ற நாடகக் கதையில் சூனியக்காரிகள் மந்திரங்களால் அசங்கிதமான வஸ்துக்களால் பேய் பிசாசுகளை எழுப்புவதை நன்றாக வர்ணித்துள்ளார். இதைப்போன்ற கற்பனையை ஜர்மன் பிரபல கவியாகிய கிதே (Goethe) என்றவர் தன்னுடைய பிரபல நூலாகிய 'பாஸ்டில்' (Fawst) வரைந்துள்ளார். நமது நாட்டில் "சூனியம்" என்ற பித்தலாட்டம் கிராம மக்களை வதைத்து வருகின்றது. சூனியத்தால் கிராம முழுமையுமே பயந்து விடுகின்றது! சூனியக்காரனென்ற பித்தலாட்டக்காரனைக் கண்டதும், பாமர மக்கள் நடுங்குகின்றார்கள்! அறிவின்மையாலும் விசாரணை இன்மையாலும்,

வெறுங் கற்பிதச் சொற்கள் இவ்வளவு பயத்தை உண்டாக்கு கின்றன. இதன் காரணமென்னவெனில் அறியாமையே. (ignorance) இரேகத்தில் நிகழும் செய்கைகள் யாவும் (Bodily actions) நடத்தைகள் யாவும் (Behaviour) நிகழ் கின்ற காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் "புருஷன்" என்ற தனிப்பொருள் ஆன்மா வடிவமாக, அல்லது பேய் பிசாசு வடிவமாக அல்லது குட்டிச் சாத்தான் வடிவமாக உலாவுகின்றதாக எண்ணுகின்றார்கள். இது முதல் கற்பனை. இக்கற்பிதப் புருஷர்களை சிற்சில கிரியைகளால் அவைக ளுக்குப் பிரியமான வஸ்துக்களைக்கொண்டு வசியப்படுத்த லாமென்ற எண்ணம் இரண்டு. இத்தியாதி பேய் பிசாசு களைக்கொண்டு, அதாவது அவைகளை வசியப்படுத்திக் கொண்டு, தங்கள் எதிரிகளின் பேரில் எந்த குட்டிச் சாத் தான்களையும் வெளியிடலாமென்ற எண்ணம் மூன்று. இம் மூன்று எண்ணங்களால் சாமானிய மனிதர் நோய்கள் உண் டாகும் காரண காரியங்களைத் தெரிந்து கொள்ளாமல் மந் திர தந்திரங்களினால் அவைகள் உண்டாகலாமென்றும், அந்நோய்கள் மூலமாக பகைவரை வருத்தலாமென்றும் நம்பு கின்றார்கள். இந்த மூட நம்பிக்கைக்கு ஆதாரமென்ன வெனில் ஆன்மா ஒன்று உண்டென்ற மூட நம்பிக்கையே யாகும். இந்த மூடநம்பிக்கை போன்ற இன்னொரு மூட நம்பிக்கை நமது மக்களிடம் காணலாம். அதாவது "கழிப்பு எடுத்தல்" என்னும் ஓர் பழக்க முறை. இது பலவிதமாக பல வஸ்துக்களைக் கொண்டு அனுஷ்டித்து வரப்படுகின்றது! கழிப்பின்முக்கிய கருத்து என்னவெனில் சில வஸ்துக்களைக் கொண்டு சில்லறைத் தெய்வங்களாகிய முனீஸ்வரன், காளி அம்மன் அருளைப்பெறலாமென்பது. இதற்கு செய்யவேண் டிய முக்கிய காரியமென்னவெனில், பலியிடுதல், அதாவது உயிரை, எந்த உயிராயினும், அந்தத் தேவதைகளுக்குச் சமர்ப்பித்து அந்தத் தேவதைகளால் உண்டானதாக எண் ணப்படும் சில நோய்களைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்கையைச் சாமான்யரிடம் அதிக மாகக் காணலாம்.

சில்லறை நோய்களாகிய வயிற்றுப் போக்கு, சீதபேதி, குளிர் ஜுரம், இவைகளைப் போக்க தேங்காய்களை சமர்ப் பிக்கின்றார்கள். சில இடங்களில் தேங்காய் குடுமியில் மூன்று குச்சிகளை நுழைத்து அந்த குச்சிகளுக்கு கந்தைகளை சுற்றி தீ பற்றவைத்து நோயாளி முன் சுத்துகிறார்கள். இத்துடன்

விளகாயை நெருப்பிலிட்டு அதையும் நோயாளி முகத்திற் கெதிரில் சுற்றும் பழக்கம் மீன் பிடிக்கும் வலைஞரிடம் காண லாம். மலேரியா என்ற குளிர் ஜுரங்களுக்கு (Malarial Patient) காலணாவை மஞ்சள் கந்தையில் சுற்றி கையில் கட்டுகின்றார்கள். இதை ஆமுலெட்ஸ் (Amulets) என்று அதாவது குளிசம் என்று சொல்லுவார்கள். இந்தியாதி வஸ்துக்களுக்கும், வியாதி போவதற்கும் என்ன சம்பந்த மென்பதை அறியக்கூடவில்லை. ஆனால் இவை போன்ற பழக்கங்கள் உலக முழுமையுமே காணலாம். காட்டுமிராண்டி களிடம் குளிசத்தை வெகு வினோத காட்சிகளுக்கெல்லாம் உபயோகிக்கின்றனர்கள்! விரோதியை வெல்ல வேண்டுமா னால் அதற்கு ஓர் குளிசம், நோய் "காற்று" "கருப்பன்" படாதிருக்க வேண்டுமானால் அதற்கோர் குளிசம், ஒரு பெண்ணை வசியம் செய்யவேண்டுமானால் அதற்கோர் குளி சம். இன்றைக்கும் சில கட்சிக்காரர்கள் ஜட்ஜிகளை வசியம் செய்ய மந்திரித்த குங்குமத்தையாகிலும், குளிசத்தையா கிலும் தரித்துக்கொண்டு ஜட்ஜ் முன் நிற்கப்பார்க்கலாம். இப்பழக்கங்களின் அந்தரங்க தாத்பரியம் என்னவெனில் மந்திரத்தால் சிறு தேவதைகளை வசியம்செய்து அந்த தேவ தையை அந்த குளிசத்தில் புகச்செய்து அந்த தேவதையின் சக்தியைக் கொண்டு, வேண்டிய கோரிக்கையை நிறை வேற்றி கொள்வதென்ற நினைவுபோலும்!

நான்கு சந்து சந்திக்கும் இடங்களில் சில உயிரைக் கொன்று, அங்கு அதன் இரத்தத்தை, குங்குமம், மஞ்சள், ஓணானவால், அல்லது முயல் காதுடன், புதைக்கும் பழக்கம் அதிகமாக பட்டணங்களிலும் பார்க்கலாம். சந்திக்கும் சந்து களுக்கும் கோரிய கோரிக்கைக்கும், என்ன சம்பந்தமென் றும் தெரியவில்லை. நானாபக்கங்களிலிருந்து வரும் ஜனங் களில், தங்கள் விரோதியும் வருவான் என்ற எண்ணமாக இருக்கலாம்! பலவித வஸ்துக்களுக்கும், நான்கு சந்து சந் திப்புக்கும், வயற்றுக் கழிச்சலுக்கும், என்ன சம்பந்தமென் றும் விளங்கவில்லை. சில சூனியக்காரர்களை (Sorcerers) விசாரித்ததில், புதைத்த சாயான்கள் அழுகும்மாதிரி, எதிரி யும் அழுகிப் போவானாம்! இது என்ன விந்தை! சுடுகாட்டில் வேகும் பிரேதங்களைப்போல், அவைகளின் சுற்றத்தாரும் வெந்துபோவதை ஒத்திருக்கிறது!!! அல்லது புதைத்த பிணங்கள் மாதிரி சுற்றத்தாரும் அழுகுவார்களோ? மனி தனுக்கு, அகோர எண்ணங்கள் (Wild, bizzare thoughts)

தோன்றுகின்றன. அவைகளில், இதுவும் ஒன்றாக இருக்கலாம். இதை சாமான்ய மக்கள், கேட்டு, மயங்கி, விஷயங்களின் சம்பந்தங்களை அறியாமல், பல எண்ணங்களிலும் மனதைச் செலுத்தி, மோசம் போகும் விநோதமே விநோதம்! இவைகளைச் செய்து பிழைக்கும் மனிதர்களை விலங்கிட்டு தண்டிக்கும் வரை, இந்த அகோர எண்ணங்கள், பழக்கத்தில் வந்துகொண்டே இருக்கும். இதனால் பலவாயிரம் ஏழை மக்கள் ஏமாந்துகொண்டே போவார்கள். பல உயிர்களுக்கும் நாசமுற இடங்கொடுக்கின்றது.

இக்கொடிய பழக்க வழக்கங்களின் ஆதாரங்களை விளக்குவது மாத்திரம் போதா. இதன் ஆபாசங்களை தெரியப் படுத்தலும் போதா. இவைகளால் எழும் கெடுதிகளை விளக்குவதும் போதா. இந்தமாதிரி ஈனத்தை நீடிக்கச்செய்யும், மந்திரக்காரர்களையும் சூனியக்காரர்களையும், (Sorcerers) குற்றவாளிகளாக்கவும், தண்டிக்கவும், பகுத்தறிவுச் சங்கத்தார் (Rationalist) ஆதிக்கம் பெறவேண்டும். பகுத்தறிவுச் சங்கத்தோடு (Rationalist Association) நின்றால் போதாது. அரசியலில் நமது பிரதிநிதிகளை அனுப்பி இந்தக் கொடுமைகளை நீக்கும் நீதிமார்க்கங்களைக் கையாடல் வேண்டும். சட்டங்களால் தண்டிக்கப் படாமல், இம்மகாபாதக பழக்கங்கள், ஒழியவே யொழியா. பகுத்தறிவுச் சங்கத்தாருக்குப் பதிலாக நமது நாட்டில் உழைத்துவரும் சுயமரியாதைக் கூட்டத்தார், இதன் விஷயமாக அரசியலில் கிளர்ச்சி செய்ய வேண்டும். அரசியல் ஆதிக்கம் பெறாமல், எந்த சமூகத்தீமைகளையும் வேரறுக்கமுடியாது "சதி" (Suttee) எனும்கொடும் பழக்கத்தை ஒழித்ததும், விதவாவிவாக நியாயமும், ஜாதி துறந்தாருக்கு ஆதரவும், கிடைக்கப் பெற்றதும் அரசியல் ஆதிக்கம் இருந்தமையால் என அறிக. இவை இன்றேல், இன்றைக்கும், 100 வருஷம் பிறக்கும். வெறும் பிரசாரத்தால் மூட நம்பிக்கைகள் முடிவுபெறா எனவும் அறிக. இதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானால், நமது இளவரசர் வரும் போது, ஒன்பது கருப்புப் பூனைகளையும், ஒரு எட்டுக்கால் பூச்சியையும், அதிர்ஷ்டம் உண்டாக பிரயாணத்தில் கொண்டு போவது வழக்கமாம்! அரசர்களே மூடப் பழக்கங்களுக்கு இடம் கொடுத்தால் சாமான்ய ஜனங்களாகிய நாம் எவ்வளவு? அதற்குத்தான் இந்த மூடப் பழக்க வழக்கங்களை விட்டுவிட சட்ட திட்டங்கள் ஏற்பட வேண்டும். ஆங்கிலேயர்கள் 13வது எண்ணைக்கண்டு [Numbers 13] பயப்படுவதும் ஓர் அதிசயம். சிற்சில எண்கள், மகத்துவம் அடைந்து இருப்பதைப்

பார்த்தால் ஆச்சரியமாகவே இருக்கின்றது. மும்மணி, மும்மூர்த்தி, மூன்று உலகம் கீழ், மேல் நடு என்று 3-க்கும் பஞ்சலோகம், பஞ்ச சீலம், பஞ்ச மாபாதகம் என 5-க்கும், ஏழு கால், ஏழுமேகம் ஏழு ரிஷிகள், ஏழு வர்ணம் என 7-க்கும், ஒன்பது நவக்கிரகங்கள், ஒன்பது வாரம் என 9-க்கும், பன்னிரண்டு மாணாக்கர்கள், (Twelve Disciples) பன்னிரண்டு நட்சத்திரங்கள், பன்னிரண்டு மாதங்கள் என 12-க்கும், இவ்விதமான சிற்சில கணிதங்களுக்கு (Numbers) பிரக்யாதி கொடுத்துள்ளார். இதுவும் ஓர் சொல் பழக்கம். இந்த எண்கள் சோதிடத்தில் அதிகமாக உபயோகிக்கப்படும். இவ்வெண்களைச் சொன்னால் அதன் மேல் சோதிடம் (Astrologer) அந்தக்கணக்கிற்கு ஒத்த நடவடிக்கைகளைச் சொல்கின்றான். இவையாவும் ஓர் வித பித்தலாட்டம் என அறிக. எண்களுக்கும், நமது நடவடிக்கைகளுக்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்கின்றேன். நட்சத்திரங்களுக்கும், நமக்குள்ள சம்மந்தம் தினை அளவுகூட ஒன்றுமில்லை 1, 2, 3, 4, 5, 6......என்று கோடி எண்களை உச்சரித்தாலும், இந்த எண்களுக்கும் நமது குணசேட்டைகளுக்கும் என்ன உறவு? எனக் கேட்கின்றேன். கோடி என்று சொல்வதில் கோடி ஒன்று இருக்கிறது. கோடி ஒன்றைச் சொல்லாமல் நமது சௌகரியத்திற்காக கோடி ஒன்றுகளை, ஒரு கோடி என்று வழங்குகின்றோம். அதே மாதிரி 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.........ல் இரண்டு ஒன்றும் மூன்று ஒன்றும்......சொல்வதை விட்டு 2, 3, 4, 5.......... என்று சுருங்க உரைக்கின்றோம். இதுதான் கணக்கின் வரலாறு. பெருக்கலும், கூட்டலும், கழித்தலும் எத்தனை ஒன்றைக் கழித்தோம், எத்தனை ஒன்றைக் கூட்டினோம் என்று அடிக்கடி சொல்லாமல் 4+4=8 என்கின்றோம். 4×4= பதினாறு என்கின்றோம். நம்முடைய அவசரத்திற்காக அங்ககணிதம், பீஜகணிதம் ஏற்பட்டன. நம்முடைய சௌகரியத்திற்கும், அவசரத்திற்கும் சுருங்க உரைத்தலுக்கும் (Our Convenience quickness and brevity) ஏற்படுத்திக் கொண்ட எண்களை மகத்துவப் படுத்துவதென்றால் இதை விட பயித்தியக்காரத்தனம் உலகில் ஒன்றுமில்லை. சோதிடம் முழுமையும் எண்களைக் கொண்டே நிர்ணயிக்கின்றார்கள். இதை நமது "நாலடி" அதிகாரிகள் பித்தத்திலும் பித்தம் என்று வரைந்துள்ளார்.

சோதிடம், மந்திர தந்திரங்கள், பில்லி, சூன்யாதிகள், பூசை நைவேத்தியம், பிரார்த்தனை, (Prayer) முதலிய பழக்கங்கள் தொழில் புரியாமல், எளிதில் பலனை அனுப

விக்க நேரிடும் சோம்பேறிகளுக்கு ஏற்பட்ட மோச வித்தைகளாகும்.

செல்வமும், சம்பத்தும், வெற்றியும் அடைய வேண்டுமானால் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். இவ்விதம் உழைக்க மனமில்லாத சோம்பேறிகளுடைய கோரிக்கைகளுக்கு ஓர் வித பரிகாரம் கொடுக்க ஏற்பட்டவை. எல்லா மதங்களும், எல்லா மந்திரங்களும், எல்லாப் பிரார்த்தனைகளும் மனிதனுடைய மூடக் கோரிக்கைகளுக்கு ஆறுதலையுண்டாக்க ஏற்பட்டவை. பிரகிருதத்தில் (Nature) எதையாகிலும் பெறவேண்டுமானால் கஷ்டப்படவேண்டும். மழைத் தண்ணீரைக் கட்ட, உழுது பயிரிட, துணிகளை நெய்ய, கப்பல் கட்ட, யாத்திரை செய்ய, கல்வி கற்க, மற்றும் பல காரியங்கள் செய்ய மெய்வருந்த உழைத்தே தீரவேண்டும். மந்திரத்தால், தந்திரத்தால், சோசியத்தால் எந்தப்பட்சியும் எந்த உயிரும் வாழ்வுக்கு வேண்டியவைகளை பெறுகிறதில்லை. பெறவும் முடியாது. உலக முழுமையுமுள்ள ஜீவராசிகள் மெய் வருந்தி இரவும் பகலும் கஷ்டப்பட்டே ஜீவித்து வருகின்றன. மெஞ்ஞான பயன்கள் யாவும் (Scientific achievement) மெய்வருந்த கஷ்டப்பட்டமையால் தான் இன்று மனிதர்கள் அடையப்பெற்றுள்ளார்கள். ரயில்வேக்களும், ஆகாயரதங்களும், பேசும் யந்திரங்களும், மின்சார வண்டிகளும், மின்சார விளக்குகளும் பல வருஷம் கஷ்டப்பட்டன்றோ கண்டுபிடிக்கப்பட்டன! "ஒரு எண்ணைச்சொல்லு, ஐந்துக்குக் குறையச்சொல்லு," என்று கேட்டு ஓலைச் சீட்டைப்பார்த்து, உனக்கு ஆகாய ரதங்கள் கண்டுபிடிக்கச் சக்தியுண்டாகுமென்றதனாலா ஆகாய ரதங்கள் வந்தன? 1874-ம் வருஷ முதல் நாளதுவரை கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறபடியால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அபாயத்தினின்று (Accidents) மீண்டு வருகின்றோம். எந்த சோதிடக்காரன் இந்த அபாயங்களைத் (Accidents) தெரிந்து முன் எச்சரிக்கை செய்கின்றான்? பூகம்பத்தால் (Earthquaks) பூமி அதிர்ச்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் திடீரென் மடிகின்றார்கள். இதன் ஆதாரங்களைக் கண்டுபிடித்து முன் எச்சரிக்கை செய்ய பல தேசங்களில் பூமி அதிர்ச்சி நூலோர் (Scismologists) மெய்வருந்த உழைத்து வருகின்றார்கள். மழை, இடி, மின்னல், புயல், பனி எந்தக்காலத்தில் வருமென்று முன் அறிக்கையிட, கடந்த 50 வருஷமாக உலகந் தோறும் ஞானவாதிகள் காற்று, மழை (Metcoriologists) இரவு பகலெனப் பாராமல் கஷ்டப்பட்டுக்கொண்டே வருகின்

றார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டுவந்தும் பிரகிருதம் (Nature) அவர்களுக்கு இடம் தருவதாகக் காணோம். விடா முயற்சி கொண்டு உழைத்து வந்தால் அன்றோ, எந்தப் பயனும் பெற முடியும்! இதை விட்டு விட்டு சோம்பித்திரியும் சில தனவந்தர்கள் "எனக்கு அந்த ஜோஸ்யன் சொன்னான், இந்த ஜோஸ்யன் சொன்னான்" என்று ஏழை மக்களை ஏமாற்றுவதைக் கண்டால் யாருக்குத்தான் மனம் பொறுக்கும்?

நட்சத்திர சம்பந்தத்தால் உலக செல்வாக்கும், சம்பத்தும், செல்வமும், அறிவும், ஞானமும், பிரக்யாதியும் கிடைக்குமென்றால் எவ்வளவு பேருக்கோ கிடைத்திருக்குமே? செல்வமும் செல்வாக்கும், முதலில் பெற்றவர்கள் அவர்களுடைய திறமையால் அடையப்பெற்றார்களே யொழிய நட்சத்திர சம்மந்தத்தாலோ அல்லது மந்திரத்தாலோ அல்லது எண்ணங்களாலோ பெறவில்லையென்பது மக்கள் அனுபவம்.

நம்முடைய நடத்தை நமது வழக்க வொழுக்கங்களாலும் நமது தாய் தந்தையர், சுற்றத்தார், உறவினர் சிநேகிதர் அடுத்தவர்களுடைய கூட்டுறவாலும்சம்பந்தப்பட்டு இருக்கின்றனவே யொழிய கோடிமைலுக்கப்பால் மினுக்கு மினுக்கென பிரகாசிக்கும் நட்சத்திரங்களால் ஒன்றும் ஆவதில்லை. திருஷ்டாந்தம் வேண்டுமானால் மெழுகுவத்தி ஒன்றை அடுத்த அறையில் கொழுத்தி வைத்து அதனால் நமது நடத்தையோ நடவடிக்கையோ பாதிக்கப்படுகிறதா என்று பாருங்கள்! இல்லையானால் அதே வெளிச்சத்தைத்தரும் நட்சத்திரங்களால் நமது நடத்தை பாதிக்கப்படுவது என்ன நிச்சயம்?

அதே மாதிரி அடுத்த வீட்டுக்காரன் கோழி இறைச்சியையும், தவளை இறைச்சியையும் தின்பது நமது வீட்டுப் பிள்ளைகளுடைய சுகத்தை எப்படிப் பாதிக்கும்? அது போலவே சுடுகாட்டு எலும்புகளும், மனிதனுடைய பெருவிரலும் குரங்கு நகங்களும் அடுத்த வீட்டுக்காரன் குழந்தையின் சுகத்தை எப்படிக் கெடுக்கும்? ஆதலின் சூனியத்தால் ஒருவனை கொல்வதாவது நோயில் விழச் செய்வதாவது குதிரைக்குக் கொம்பு முளைத்தது என்று கேட்பதையே ஒக்கும்.

முதலில் பிள்ளையின் பெருவிரலாலும், ஓணான் பல்லி வால் துண்டுகளாலும், ஆமை ஓட்டாலும், தவளை, தேரை

தர்மமும் - பாவபுண்ணியமும்.

(ஈ. வெ. ரா.)

உலகிலுள்ள எல்லா மதங்களைவிட இந்து மதத்தில் தான் தர்மம் என்பது இது இது என்று தெளிவாய் வரையறுத்துக் கற்பிக்கப்பட்டிருப்பதினால் கண்மூடித்தனமான செய்கைகள் இன்னும் செழித்து வருவதற்கிடமாயிருக்கின்றது. இது சம்மந்தமாக இந்து மதமும் கோட்பாடுகளும் தர்மமும் ஒரு எல்லை ஏற்படுத்தியிருப்பதனால் அவ்வளவுக்குச் செய்யத்தான் யாருக்கும் மனம் வருமேதவிர அதைத் தாண்டிப்போக யாருக்கும் மனம் வராது. ஒரு அடியாருக்கு அன்னமளித்தால் இவ்வளவு புண்ணியம் என்று கணக்குவாரியாக அதன் பலனாய் இவ்வளவு காலத்திற்கு மோட்சத்திலிருக்கலாமென்று வகுத்தெழுதி வைத்திருக்கிறார்கள். இதைக்கேட்ட பிறகுதான் இத்தகைய தர்ம சம்பந்தமான எண்ணம் வருகிறதே தவிர வேறல்ல. இம்மாதிரிமான காரியங்களினால்

யாலும், ஒருவனை சாகவைக்கக் கூடுமானால், சண்டைக்கு சேனைகளேன்? அம்பு வில் ஏன்? குண்டு துப்பாக்கிகளேன்? இரண்டொரு செத்துப்போன ஓணான், எளிய குழந்தைகளின் பெருவிரலைக் கொண்டு சில மந்திரத்தைச் சொல்லி சேனைத் தலைவனை ''எடுத்து'' விடலாமே? மெழுகுவத்தி வெளிச்சத்தால் நமது நல்ல நடவடிக்கையோ, அல்லது கெட்ட நடவடிக்கையோ சரிப்படுத்தப்பட்டால் (Regulated) என் ஒவ்வொரு சிறுவன் சிறுமியை மெழுகுவத்தியாலேயே திருந்தவைக்கலாமே! இது ஆபாசமான விஷயமென்றால் மெழுகுவத்திக்கு மிக கேவல வெளிச்சத்தைக் கொடுக்கும் ஒரு நட்சத்திரத்தால் நமது நடவடிக்கை ஆளப்படுமென்பது ஏன் ஆபாச வார்த்தை ஆகாது? ஆதலின் பில்லி,சூனியாதிகளும், சோதிடமும், எண்களும்,(Numbers) மந்திர தந்திரங்களும் சில மோசக்காரர் ஜீவனம் செய்து பிழைக்க ஏற்பட்ட சூழ்ச்சிகளேயொழிய அவ்வித்தைகளில் யாதாமொரு உண்மையுமில்லையென அறிக.

உண்மையான பரோபகாரமான காரியங்களுக்குக் குந்தக மேற்படுகின்றதென்பதை நீங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். இவற்றால்தான் நாடு முன்னுக்கு வருங்காரியங்கள் தடைபடுகின்றன. எந்த தேசத்திலும் தர்மமில்லாமலிருக்க வில்லை. வெள்ளைக்கார தேசத்தின் தர்மம் நம் நாட்டுத் தர்மத்தைவிட பன்மடங்கு உத்தமமாயும் தேசத்திற்கும் சமூகத்திற்கும் உண்மையான நன்மையளிப்பதாயுமிருக்கின்றது. வெள்ளைக்கார நாட்டுத் தர்மம் கிணறு நிரம்பி வழிவது போல அவன் ராஜ்யம் நிரம்பி நம் நாட்டிலும் வழிந்தோடுகின்றது.

அத்தகைய தர்மம் நிறைந்த நாட்டில் என்ன வழக்கமென்றால், ஒருவன் தெருவில் பிச்சைக்கு வந்தால் உடனே போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போவான். அங்கு பிச்சையிடுவது சோம்பேறிகளை வளர்க்கும் முறை என்பதை நன்கறிந்து கொண்டார்கள். வெள்ளைக்கார நாட்டில் படிக்காதவன் என்றால் அவன் வெட்கித் தலைகுனித்து விடுவான். நம் நாட்டிலோ தர்மம் என்று வந்தால் நமக்கென்ன, நம்மாலான சாப்பாடு போட்டுவிடுவோம், பிறகு அவன் தலைவிதிபோலாகிறது. சரஸ்வதி நாக்கிலிருந்தால் எப்படியும் படித்துவிடுவான் என்ற தர்மம்தான் நமக்குக் கற்பிக்கப் பட்டிருக்கின்றது. அவர்கள் முன்னேறும் போது நாம் இக்கதிக்காளாகியிருக்கக் காரணமென்ன? நமது மதங்கள் தர்மங்கள் என்ற பல தத்துவங்கள்தான் நம்மை இந்நிலையில் வைத்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றத்திற்குப் பலமும் பீரங்கியும் மட்டும் காரணமல்ல. சென்னை மாகாணத்தில் உயர்ந்த குஷ்டரோக, க்ஷயரோக, மருத்துவ ஆஸ்பத்திரிகளும், உயர்ந்த கலாசாலைகளும், கல்லூரிகளும் அவர்களுடையதாகத்தானிருக்கக் காண்கிறோம். தப்பான வழிகளில் பிள்ளைகளைப்பெற்று கள்ளியில் போட்டுவிட்டால் அவற்றை எடுத்து வளர்த்து சம்ரக்ஷிக்கும் அனாதை ஆஸ்ரமங்களும் அவர்களுடையதாகத்தானிருக்கின்றன. தெருவிலும் நடக்கக்கூடாது, அருகிலும வரக்கூடாதென்று மிருகங்களிலும் கேவலமாய் நம்மால் நடத்தப்படுபவர்களையும், அவர்கள் சேர்த்துக் கல்வியளித்துச் சமத்துவம் பாராட்டி மாக்களெனக் கருதப்பட்டவர்களையும் அவர்கள் மக்களாக்கி வருவதைக்காண்கின்றோம். இவற்றை எல்லாம் நாம் எளிதில் மறக்கமுடியாது; அல்லது மறைக்கவும் முடியாது. அவர்கள் நொண்டியை, முடத்தை, குருடர்களைக் கொன்று விடுகிறார்களா? அத்தகையவர்களுக்கும் தம் சுய உதவியினால் எவ்

வளவுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு உதவி புரிந்து வழிகாட்டி வருகின்றார்கள். இதனால் வெள்ளைக்காரன் தான் புத்திசாலியா? நமது முன்னோர்கள் என்ன முட்டாள்களா? என்ற கேள்வியும் கிளம்பக்கூடும். இதற்காக நாம் நமது முன்னோர்கள் பேரிலும் சுலபமாகக் குற்றம் சொல்லிவிட முடியாது. எந்தக்கொள்கையும், நீதியும், தர்மமும் காலத்திற்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறுதானிருக்கும். ராமேஸ்வரத்தில் ஒரு செட்டியார் தர்மம் செய்வதற்காகச் சாணியும், பாலும், சுக்கும் மட்டும் கொடுக்கிறார் என்றால் அதுபோல நாமும் இங்கு சாணியைக் குவியலாய்க் கொட்டிக்கொண்டு வாரிக் கொடுப்பது தகுதியாகுமா? அந்த விடத்திற்கு அவசியத்திற்கேற்றவாறு அது முக்கிய தர்மமாக விருக்கலாம் அதற்காக நாம் அந்த செட்டியார்மீது குறை சொல்ல முடியுமா? முன்னூறு நானூறு வருஷங்களுக்கு முந்திய காலத்து தர்மமென்ற காரியங்கள் இப்போது செய்ய முடியாதவைகளாகத் தானிருக்கும். அப்போது அவை அவசியமாகச் செய்ய வேண்டியவைகளாகத்தானிருக்கும். அக்காலத்தில் தற்போதிருப்பது போன்று துரிதமான போக்கு வரத்து சாதனங்களோ மற்ற வசதிகளோ கிடையாது. அந்தந்தநாட்டு மக்களுக்கு அந்தந்த ஊரே சுவர்க்கம். அக்காலத்தில் அவர்கள் கிணற்றுத் தவளைகளைப்போலத்தானிருக்க முடியும். அப்பேர்ப்பட்டவர்களுக்குவிளைச்சலும் அபரிமிதமாய்விளைந்து கொண்டிருந்தது. அக்காலத்திலும் மழை பெய்வதற்கு அவசியமான காடு முதலியவை அடர்ந்திருந்ததால் பருவ மழைகள் தப்புவதில்லை. இதனால் உழுதாலும் உழாமல் விட்டாலும் அறுவடைக்குக் குறைவில்லை. அப்போது அதிகமாக விளைந்தாலும் தற்போதைப்போல விளைந்த தானிய முழுதையும் வெளி ஊருக்குக் கொண்டுபோகப்படாமல் பெரும் குழிகள் வெட்டி அவற்றில் புதைத்து வைப்பதும் வழக்கமாயிருந்தது. அன்றியும் அக்காலத்தில் பிச்சைக்காரர்களும் மிக அரிதென்றே சொல்லலாம். எவ்வளவு விளைந்தாலும் வாரி வெளி நாட்டுக்கு அனுப்புவது என்ற முறை அக்காலத்தில் கிடையாது. அதற்கு சாதனமும் கிடையாது. அதனால்தான் இவ்வளவு பேருக்கு அன்னமிட்டால் இவ்வளவு புண்ணியமென்றும் எழுதி வைக்க இடமிருந்தது. அதனால் நம் நாட்டில் காலக்கிரமத்தில் பிச்சை எடுக்கும் ஜாதிகளென்றே பல ஜாதிகளும் தோன்றிவிட்டன. ஏதோ சாம்பலையும் மண்ணையும் பூசிக்

கொண்டு வந்தாலும் சாமி என்று விழுந்து கும்பிடும் முட்டாள்கள் அதிகமாயிருக்கிறார்கள் என்பதையறிந்துதான் பிச்சைக்காரர்களும் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருகின்றனர். இத்தனை கோயிலிருக்கையில் இன்னும் புதிதாகக் கோயில் கட்டுவது அவசியமாவென்று கேட்டால் "பாவி தடுக்கிறான், அவன் சொல்லைக்கேட்ட காதை லோஷன் போட்டுக் கழுவவேண்டு"மென்கிறார்கள். அக்காலத்தில் செல்வ மிகுதியினால் செலவிடுவதற்கு வழியின்றி இவ்வாறெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் வினை பொருள்களுக்கு செலவு வேண்டுமென்ற முறையில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு மேன்மேலும் தர்மம் என்னும் பெயரால் பலவாறு செலவிட்டு வந்தார்கள். அக்காலத்தில் எத்தனை கடவுளிருந்தாலும் பூசைபோட்டு, எவ்வளவுபேர் வந்தாலும் சோறுபோடும் செல்வமும் செழிப்புமிருந்தது. அதனால்தான் இவ்வளவு கடவுள்களும் அடியார்களும் ஏற்பட இடமிருந்தது. ஆனால் இப்போதைய கொள்கையும் மதக்கோட்பாடுகளும் கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் மனிதன் அறிவுக்கும் தன்மைக்கும் ஏற்றவாறுமிருக்க வேண்டும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் எல்லா மதஸ்தர்களுந்தான் பாவம் செய்யக்கூடாதென்கிறார்கள். ஆனால் பாவம், சுத்தம் முதலான தத்துவங்களுக்கு அந்தந்த மதத்தினருக்கு அர்த்தம் வேறாகத்தானிருக்கின்றது. பாலைவனத்தில் தோன்றிய இஸ்லாம் மதத்தில் சுத்தமென்றால் மூன்று வேளையும் குளிப்பதுதான் சுத்தமென்று எழுதிவைக்க முடியாது. அங்கு மணலை உடம்பில் தேய்த்துக் கொண்டாலும் குளித்துச் சுத்தமாவதற்கு ஒப்பாகத்தான் கருதப்படக்கூடும். அதனால் அந்த சுத்தம் தப்பு என்று சொல்லிவிட முடியாது. நமக்குள் வெளிக்குப்போனால் நான்கு செம்பு தண்ணீர் விட்டு கழுவுபவர்களும், போதாக்குறைக்குத் தலை முழுகுபவர்களுமிருக்கிறார்கள். அவ்வாறு செய்தால்தான் அதனைச் சுத்தமெனக் கருதப்படுகிறது. ஆனால் இவர்களைவிட பன்மடங்கு கடுமையான சுகாதாரமுடைய வெள்ளைக்காரன் காகிதத்தில் பாதியும் கால் சராயில் பாதியுமாகத் துடைத்துவிட்டுப் போகிறான். அவன் நாட்டில் அவ்வளவுதான் வசதி. இங்கு குளிக்கா விட்டால் பாவி என்கிறார்கள். அங்கு குளித்தாயாவென்று கேட்பதே மரியாதையல்லவெனக் கருதப்படுகிறது. இங்கு வியர்வையினால் குளிக்க வேண்டிய

அவசியமுண்டு. அங்கு குளிரினால் அத்தகைய அவசிய மில்லை. அவ்வாறே இந்து மதத்தில் எறும்பை மிதித்து விட்டாலும் பாவம். அவன் சங்கதியோ அதைப்பற்றி கவலையேயில்லை. இங்கு நாம் பசுவை அடித் தாலும் மகா பாவமென்கிறோம். அங்கு அவன் அதைக் கொன்று தின்னாவிடில் வேறு மார்க்கமில்லை. ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாமென்கிறான். மற்றவன் அதைப் பாவமென்கிறான். இப்படி சௌகரியத்திற்கும் பழக்கத்திற் கும் ஏற்றவாறுதான் கொள்கைகளும் கோட்பாடு களுமிருக்கக்கூடும். ஆதலால் அனைத்தும் காலதேச வர்த் தமானத்திற் கேற்றவாறிருக்க வேண்டுமென்பது நன்கு விளங்கும். அன்றியும் அந்தக்காலத்தில் திறமைக்கேற்ற வாறு ஏமாற்ற ஏதோ எழுதிவைத்திருக்கலாம். அவற்றைக் குறித்து இப்போது கவலையில்லை. ஆனால், நாம் முக்கிய மாய் கவனிக்க வேண்டியது,இன்றைய நிலைமையில் எப்படியிருக்க வேண்டுமென்பதேயாகும். அதிலிருந்து தப்ப வழியுண்டாவென்றும் பார்க்கவேண்டும். நாம், நமது செல் வம், அறிவு,ஒழுக்கம் முதலியவை பிரயோஜனமான வழியில் செலவிடப்பட வேண்டுமென்பதனால் அது தர்மத்திற்கு விரோதமானதென்று சொல்லமுடியாது. இப்போது நாமி ருக்கும் நிலையில் தர்மத்தின் பெயரால் சத்திரமும் சாவடி களும் கட்டிக்கொண்டு போவோமானால் நம் சமூகத்தின் கதி என்னாகும்? நமது நாட்டின் நிலைக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவாறுதான் எந்த தர்மமும் ஏற்பாடு செய் யப்படவேண்டும். இனி நமக்குப் புதிதாகச் சாமிகள் வேண் டியதில்லை. இப்போது நமது நாட்டில் 22-கோடி இந்துக்க ளிருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள் களோ புராணங்களின்கணக்குப்படி 33-கோடி கடவுள்களாயி ருக்கின்றன இதனைப் ங்கிட்டால் ஒரு ஆசாமிக்கு ஒன்ற ரைக்கடவுள் வீதம் வரும். உலகிலே மக்களைவிட கடவுள் கள்தான் அதிகமாயிருக்கிறது. இவ்வளவு கடவுள்களை நாம் காப்பாற்றினால் போதும். நாட்டின் பெருமையை வளர்க்க, மக்கள் கஷ்டத்தைப் போக்க, அறிவை வளர்க்க கல்வி அத் தியாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாயும் வாழ்வதற்குத் தொழிலபிவிருத்தி அவசியம். எந்த தேசத் திலும் இவையிரண்டும் இன்றியமையாதது; அவசியமான அம்சங்கள். நம் நாட்டிலோ நூற்றுக்கு 93-பேர் படிப்பில் லாததற்குறிகளாயிருக்கிறார்கள். இதைவிட அவமானமான காரியம் ஒரு தேசத்திற்கு வேறு என்ன இருக்கிறது? அது

போலவே சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு வெளி நாடுகளுக்குப் பிழைப்புக்காக துறைமுகங்கள்தோறும் கப்பல்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஏற்றுமதி செய்யப்படுவதான கோரக்காட்சியைத் துறைமுகங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். இவ்வாறு பிழைப்பின்றியும் சாப்பாட்டுக்கு வகையின்றியும் கடல்கடந்து ஜீவிக்கச்செல்லும் ஏழை மக்கள் தொகைகளை இச்சென்னை மாகாணத்தில் மட்டும் மாதமொன்றுக்கு லட்சத்திற்கு அதிகமாகக் காணலாம். இவர்கள் குழந்தைகுட்டிகளுடனும் வயோதிகர்கள் கர்ப்பிணிகளுடனும் செல்வதான பரிதாபத்தை என்னவென்று சொல்வது. இங்குள்ள கஷ்டத்தைவிட அங்கு போய் சாகலாமென்றுதான் மனம் முறிந்து போகிறார்கள். இக்கொடுமைகளைக் கவனித்து பரிகாரம் தேடப்படுவதில்லை. இத்தகைய நாட்டில் நடக்கும் விஷயங்களோ விபரீதமாகத்தானிருக்கின்றன.

இங்கு சாமிகளுக்கும் சடங்குகளுக்கும் உற்சவ வேடிக்கைகளுக்கும் சதுர் ஆட்டங்களுக்கும் லட்சக்கணக்காகத்தான் செலவிடப்படுகின்றது. திருப்பதி முதலிய தேவஸ்தானங்களுக்கும், முக்கியமான மடங்களுக்கும் சுமார் 20 லட்சத்திற்கு அதிகமாக மாதாமாதம் வருமானம் கிடைக்கிறது. ஒரு சாமிக்கு ஒரு வேளைச் சாப்பாடாகிய சட்டி அரணைப் பூசைக்குச் சுமார் 20 ரூபாய்க்கு அதிகம் செலவிடப்படுகிறது. இவ்வாறிருக்க அச்சாமியின் பிள்ளைகள், சாமியே கதியென இருக்கும் மக்கள் கஞ்சிக்கலைந்து கொண்டு பிழைக்க வழியில்லாது ஆயிரக்கணக்காகக் கப்பலேறி வெளி நாடு சென்று துன்புறுகிறார்கள். இவையிரண்டினையும் சேர்த்துப் பார்த்தால் அந்த சாமிக்குத்தான் அதிக அவமானமென்பது நன்கு விளங்கும். அத்தகைய சாமிகளுக்கு இருக்கும் சொத்துக்கும் ஆடம்பரங்களுக்கும் வாண வேடிக்கைகளுக்கும், சதுர் கச்சேரிகளுக்கும் ஒரு விதமான அளவில்லை. ராஜாவுக்குக்கூட அவ்வளவு ஆடம்பரமில்லை. ராஜாவாயினும் கொடுங்கோன்மையினால் அந்த சுகங்களை, ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பாராமல் அனுபவிக்கிறான் என்று சொல்லலாம். ஆனால், "கருணைவள்ளல்" என்ற கடவுள் இப்படி வீணாக்குவதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கலாமாவென்றுதான் உங்களைக்கேட்கின்றேன். இதனால் நான் கடவுள்மீது குற்றம் சொல்லவில்லை. அது என்ன செய்யும், இன்றைக்கு யாராவது தங்கக் காரை போட்டால் பேசாமல் போட்டுக்கொள்ளுகிறது. யாராவது

கழட்டிக்கொண்டு போனாலும் கல்லுப்போல் பேசாமல் சும்மா இருக்கிறது. சமீபத்தில் ஆண்டாள் தாலியையும் யாரோ கழட்டிக்கொண்டு போய்விட்டதாயும் பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள். ஏன், இந்த நாட்டில் நூற்றுக்கு 93 வீதமானவர்கள் தற்குறிகளாயிருக்கவேண்டும்? இதற்கும் வறுமைக்கும் காரணமென்ன? ஆனால், நான் உங்களை சந்தோஷப்படுத்த ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம். "வெள்ளைக்கார நீச அரசாங்கத்தார் நம் பணத்தைக் கொள்ளையிட்டுப் போவதாகச் சிலர் கூச்சலிடுகின்றனர். அந்த நீச அரசாங்கத்தால்தான் சரஸ்வதியும் நம் நாட்டை விட்டு ஓடிவிட்டாள்" என்கின்றனர் மற்றும் சிலர். ஆனால் நம் நாட்டை விட்டோடிய சரஸ்வதி அந்த நீச நாட்டுக்குத்தான் பேய்ச் சேர்ந்திருக்கிறாள். வெள்ளைக்காரன் கொள்ளையிட்டுப் போவதையும், சாமிகளுக்கும், சடங்குகளுக்கும்செலவிடுவதையும் கணக்குப்பார்த்தால் சாமிகளுக்குச் செலவாவதுதான் பன்மடங்கு அதிகமாகும். சாமிகள், மதம், சடங்குகள் முதலியவற்றின் பேரால் செலவாகும் பணமும் கஷ்ட நஷ்டமும் அசௌகரியங்களும் கணக்கிட முடியாது. பணம் சம்பாதிப்பதில் எத்தனையோ தந்திரமும் சூழ்ச்சியும் செய்யும் அறிவாளிகளுங்கூட இவ்வாறு செலவிடுவதில் அந்தத் தந்திரமொன்றுமில்லாமல் முட்டாள்களாகத்தான் நடந்துகொள்ளுகின்றனர். அபிஷேகத்தில் 150 ரூபாய் கொடுத்தாலென்ன? 10 ரூபாய் கொடுத்தாலென்ன? வித்தியாசமென்னவென்று யாராவது சிந்திப்பதுண்டா? சென்னை மாகாண சர்க்காரின் கணக்குப்படி சாமிகளுக்கு வருமானம் 2 கோடிக்கு அதிகமாகிறது. இது தவிர, கணக்கில் வாராத கொள்ளைகளும் போக்கு வரத்து தரகர் செலவும் சொல்லவேண்டியதில்லை. கணக்குப்பார்த்தால் சாமிகளுக்கு நாம் கொடுப்பது சர்க்கார் வருமான வரியைவிட அதிகமாகுமேயன்றி ஒரு விதத்திலும் குறையாது. தர்மமென்றால் சாப்பாடு போடுவதுதானாவென்று கேட்டால், அப்படிக் கேட்பது பாவம் என்ற தர்ம முறையைத்தான் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய வீணுக்கு செலவாகும் பணம் மூன்று ஜில்லாவுக்குச் சாப்பாட்டுடன் கல்வி போதிக்கப் போதுமானதாகும். இந்த மாதிரி சுமார் 25 வருடங்களுக்கு நம் சாமிகள் சிறிது வயிற்றை இழுத்துக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தால் பிறகு நம் நாட்டில் ஒருவன் கூட மருந்துக்கும் தற்குறியாயிருக்கக் காணமுடியாதென்பது திண்ணம். உள்ளதுள்ளபடி உண்மையைச் சொன்னால் அவன் தப்பு சொன்னான்; இவன் நாஸ்திகப்பேச்சு பேசுகிறான் என்று வீண் கூச்சலிடும் கூட்டத்தாருக்குக் குறை

வில்லை. மேடைமீதேறி வெள்ளைக்காரர்களை துரத்தி விடுவோமென்று பயமுறுத்தலாம். மிரட்டினாலும் அர்த்தத் தோடல்லவா மிரட்ட வேண்டும்? ஜேபியில் எலிக்குஞ்சு இருக்கிறது, எடுத்து விட்டால் செத்துப்போவாய் என்றால் எவன் பயப்படுவான்? எடுத்துவிடு, ஒரு கை பார்ப்போமென் றுதான் சொல்லுவான். கல்விக்கும் தொழிலுக்கும் நமது அறிவையும் செல்வத்தையும் செலவிடாமல் நாம் யாவை யும் வெல்ல முடியாது, ஒரு கூட்டத்தார் நம்மைத் தாழ்ந்த நிலையிலேயே அடக்கி வைத்துக்கொண்டிருக்க முயல்வது சரித்திர பூர்வமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. மத விஷ யத்திலும் மற்ற விஷயங்களிலும் வெள்ளைக்காரன் நம்மை விடக் கேவலமாக இருந்திருப்பதை அவர்கள் தேசசரித்தி ரமே நன்கு விளக்குகிறது. ஆங்கிருந்த புரோகிதமும் சாமி களும் இப்போது எங்கு போயின? எல்லாம் இங்கு வந்து சேர்ந்தன. அவர்கள் எல்லா வற்றையும் இங்கு மூட்டை கட்டி யனுப்பி செலவுக்குப் பணமும் கொடுத்துவிட்டு அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியிலிறங்கி யிருப்பதால் நாளுக்கு நாள், அந்நாட்டார் முன்னேற்ற மடைந்து வருகிறார்கள். அவர் கள் சாமிக்கு உற்சவமில்லை, தேர் இல்லை, திருவிழா இல்லை. அப்படி யிருந்தும் அந்தச்சாமி அவர்கள் பல அற்புதங்கள் கண்டுபிடிக்க வழியாயிருக்க, நம் சாமிகளுக்கு லட்சக்கணக்கான பணம் செலவிட்டு தேர், திருவிழா நடத்தி யும் நாம் இந்தக் கதியிலிருக்கிறோம். நம் நாட்டுப் பொருள் கள் வெளிநாட்டுக்குப் போகின்றன என்று கூச்சலிடுவதனால் பயன் என்ன? கடுகளவாவது நாம் முன்னேற முயற்சி செய் வதில்லை. ருஷியாவில் செத்தவர்களைப் பிழைக்க வைக்கும் நூதன முறையை ஒருவர் கண்டுபிடித்தி ருப்பதை நீங்களறிந்திருப்பீர்கள். இத்தனைக்கும் அது நாஸ் திகம் நிறைந்த நாடு. நாஸ்திகருக்கு நரகம் வேண்டுமானால் ருஷியாவிலிருப்பவர்களுக்கே இருப்பிடம் சரியாய்ப் போய் விடும். ஆகலால் வேறு எந்த நாஸ்திகர்களுக்கும் நரகத்திலி டமிராது. அவ்வளவு நாஸ்திகமாயிருக்கும் ஊரில் செத்தவ னைப் பிழைக்கவைத்து சாமியோடு போட்டி போடுகிறார் கள். வெள்ளைக்காரன் நாட்டில் சாமிக்கு முக்கால் துட்டுக் கூட செலவில்லை. முஸ்லிமும் அப்படித்தான். வெள்ளைக் காரன் கோயிலுக்குப்போனால் துணி அழுக்கை வெளுப்ப தற்குச் செலவிடுவதைவிட வேறு செலவில்லை. விவசாயத்தி லும் அவர்கள் எந்தப் பழத்தை, எந்த நிறத்துடன் எந்தச் சுவையில் பயிரிட வேண்டுமென்று ஆராய்ச்சிசெய்து அதற்

குத் திராவகங்கள் ஊற்றிப் பயிரிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். நாம் உழவுகட்டவேண்டுமானாலும் பார்ப்பானைக் கூப்பிட்டு நல்ல வேளை பார்த்து அந்தந்த ஏருக்கும் மாட்டுக்கும் பூசைபோட்டு உழுவுவதனால்தான் இக்கதியிலிருக்கிறோம். நமக்கு இவ்வளவு கோடி சாமிகளும், இவ்வளவு பணச்செலவு மிருந்தும் நாம் கடுகளவாவது முன்னேற முடியாதிருக்கிறோம். பூகோள சாஸ்திரம் போதிக்கும் ஆசிரியரின் தகப்பனும், கிரகணத்தன்று தர்ப்பையை எடுத்துக்கொண்டு சமுத்திரக்கரைக்குத் தர்ப்பணம் செய்து வைக்க வந்துவிடுகிறான். இவன் பேச்சைக்கேட்டு குளிக்கப்போனால் நம்மை முதலை இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. கிரகண ஸ்நானத்துக்குப் போவோமென்று சொல்லும் எம். ஏக்களும், பி. ஏ க்களும் இன்னுமில்லாமல் போகவில்லை. இக்காலத்திலும் சந்திர சூரியனை ராகு கேது வென்ற பாம்புகள் விழுங்கும் கதைகளும், அதன் மூலமான புரட்டுகளும், பணம் பறிக்கும் சூழ்ச்சிகளும் ஒழிந்தபாடில்லை. தேச முன்னேற்றத்திற்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, ஒழுக்கத்திற்கோ முட்டுக்கட்டையாயிருக்கும் எவற்றையும் ஒழிக்க முயலவேண்டும். அம்மாதிரி செய்யும் தேசமும் மதமும் சமூகமும்தான் முன்னுக்குவரும். கிலாபத் மதப்பித்துப் பிடித்திருந்த துருக்கி தற்போது அதனை இருந்தவிடம் தெரியாமல் மூட்டை கட்டியனுப்பிவிட்டு முன்னேற்றத்துக்கு வழி தேடியதனால்தான் தற்போது ஐரோப்பாவில் மற்றைய நாடுகளைப்போல நல்ல நிலைமையையடைந்து வருகிறது. நான் தர்மம் வேண்டாமென்று சொல்லவில்லை. நம் மதத்திலுள்ள அர்த்தமற்ற தத்துவங்களை ஒழித்து பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ அதைச்செய்து மக்களுள் சுயமரியாதையும் சமத்துவமும் பரோபகாரமும் அன்பும் இன்பமும் பரவச் செய்வதற்கு வழி தேட வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். வீண் செலவிடும் பணங்களை உண்மையாகக் கஷ்டப்படுபவர்களுக்குக் கொடுத்து உபகாரம் செய்வதில் செலவிடுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். பழைய குருட்டு நம்பிக்கைகளைத் தம் சூழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக்கொண்டு சுகமாயிருந்த கூட்டத்தார் இப்போது கூலிகளையும் காலிகளையும் குறும்புப் பிரசாரத்தில் ஏவிவிடுகின்றனர். எந்தக்காலத்திலும் நன்மைக்கும் பரோபகாரத்திற்கும் விரோதமாக நம் நாட்டில் ஒரு கூட்டத்தார் இருந்திருப்பது சரித்திர மூலமாகவும் நன்கறியப்படும். அர்த்தமற்றகொள்கைகளை ஒழித்து ஒழுக்கமே பிரதானமென்று சீர்திருத்தி மற்றவனுக்கு உபகாரம் செய்வதுதான் மோட்சமென்று புகட்டவேண்டுவது அவசியம். கஷ்

"புண்ணிய ஸ்தலங்கள்"

(சித்திரபுத்திரன்)

பண்டரிபுரம்.

பண்டரிபுரம் வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம். அந்த ஸ்தல புராணத்தில் ஒரு சமயம் அந்த முக்கியத்துவத்திற்கு ஏற்ற காரணம் ஏதாவது குறிப்பிட்டிருக்கக்கூடுமோ என்பதாக சந்தேகப்படக்கூடுமானாலும் வைணவ பக்தர்களின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும் பக்தவிஜயம் என்னும் புஸ்தகத்தின் சுருக்கமாகிய பக்தலீலாமிர்தம் என்னும் புத்தகமானது, சைவர்களுக்கு எப்படி சைவ பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லக் கூடியதான சைவ புராணமாகிய பெரிய புராணமோ, அது போல்—ஏன்? ஒரு விதத்தில் அதைவிட முக்கியமானதென்று கூட சொல்லலாம். எப்படி எனில், பெரிய புராணம் என்பது சுந்தரமூர்த்திசுவாமி என்கிற ஒருவர் பாடிய ஒரு பாட்டிலிருந்து பக்தர்களின் பெயரைத் தெரிந்து அதற்கு ஆதாரமாக நம்பியாண்டார் நம்பி என்பவர் பாடிய ஒருசில—அதாவது ஒரு நூறு பாட்

டப்படுபவர்களுக்கு உதவியளித்து திருப்திசெய்வதுதான்மேலான புண்ணியம். இவற்றைச் சொன்னால் என்ன நாஸ்திகம் வந்துவிட்டது? வீணாக மக்களைக்குழப்பி அவர்கள் அறிவைக்கட்டிப் போட்டு நான் சொல்வதை நம்பு, இல்லாவிட்டால் பாவம் என்று நான் சொல்லவில்லை. எதிலும் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்போதுதான் நம் நாடு முன்னேற்றமடையுமேயன்றி, என் பாட்டன், முப்பாட்டன் போனவழி போகிறேன் என்ற மூடக்கொள்கைகளால் நாடு நாளுக்குநாள் நாசமடைவது திண்ணம். என் புத்திக்கு எட்டியதை எடுத்துக்காட்டினேன். அதில் சரி எனத் தோன்றியதை ஒப்புக்கொண்டு அதன்படி நடக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் சொல்வதில் பிசகிருந்தால் என் அறியாமைக்கு பரிதாபப் படும்படி கேட்டுக்கொள்கிறேன்.

டைக்கொண்டு நாலாயிரத்துச் சில்லறை பாட்டுகளாக்கி அவற்றிற்கு வேண்டிய சங்கதிகளை தமது சொந்த அபிப்பிராயமாக நுழைத்து பாடிய புஸ்தகமாகும். அதுவும் சமணர்களுக்கு விரோதமாய் அவர்கள் மீதும் அவர்களது குற்றமற்ற நூல்களின் மீதும் உள்ள துவேஷத்தாலும் தமது சமயவெறியாலும் கற்பிக்கப்பட்டது என்று கூடச்சொல்ல இடமுள்ளதாகிய நூல். பக்த விஜயமோ அப்படிக்கில்லாமல் ஏதோ ஒரு முனிவர் ஏதோ ஒரு ஆசாமிக்கு எல்லா சங்கதிகளும் சொன்னதாகவும் சிவன் பார்வதிக்குச் சொன்னதாகவும் எழுதிய புஸ்தகம். ஆனதால் சேக்கிழார் என்கின்ற ஒரு மனிதன் சொன்னதைவிட சிவன், முனிவர் என்கின்றவர்கள் சொன்னது என்பது உயர்ந்தது என்பதில் இவற்றை நம்பும் பக்தர்களுக்கு சிறிதும் சந்தேகமிருக்க நியாயமில்லை.

எனவே இப்பேர்ப்பட்ட உள்ளதையேதான் எடுத்து எழுதி இருக்கிறதே ஒழிய மற்றபடி நமதபிப்பிராயம் என்பதல்ல. அதாவது:—

தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பெண்ஜாதியான இந்திராணி திருமால் என்கின்ற சாமியின் பேரில் காதல் கொண்டதாகவும், சாமியும் அதற்கு சம்மதித்து பூலோகத்திற்கு போய் அங்கு 60000 வருடம் தவம் செய்யச் சொன்னதாகவும், அதற்குப்பிறகு சாமி கிருஷ்ணனாக அவதரித்ததாகவும், இந்திராணியும் ராதையாகப் பிறந்ததாகவும், பிறகு இருவரும் கூடினதாகவும், இதைக்கண்ட கிருஷ்ணனின் சொந்தப் பெண்ஜாதியாகிய ருக்மணி கோபங்கொண்டதாகவும், அதன் நிமித்தம் ராதை கிருஷ்ணனை தனக்கே புருஷனாக்கிக்கொள்ள காட்டிற்கு தவத்திற்குப் போனதாகவும், இந்த சமயத்தில் கிருஷ்ணன் ராதையைப்பிரிய நேர்ந்ததால் துறவி வேஷம் பூண்டு காடுகாடாய் திரிந்து ஏதோ ஒரு காட்டில் ராதையைத் தவக்கோலத்தில் கண்டுபிடித்ததாகவும், ராதை கிருஷ்ணனைப்பார்த்து "நீ ஒரு வஞ்சகன் என் முன் நில்லாதே" என்று கோபித்ததாகவும், கிருஷ்ணன் மதிமயங்கி மூக்கில் கை வைத்துக்கொண்டு 28 துவாபர யுக காலமாய் நின்று கொண்டிருக்கின்றதாயும், அந்த காட்சியே பண்டரிநாதன் என்றும் மற்றும் இதுபோல சில ஆபாசக்கதைகளும் எழுதப்பட்டு பண்டரிபுரத்திற்கு ஆதாரமாக சொல்லப்படுகிறது. எனவே இம்மாதிரி ஆபாசமும் புளுகும் கொண்டதான பண்டரிபுரத்தை ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாகக் கருதி மக்கள் ஏராளமாக பணம் செலவு செய்து கஷ்டப்பட்டு யாத்திரை போவதுடன் பட்டை பட்டையாய் நாமமும் போட்டுக்கொண்டு

"பண்டரிநாதா விட்டல்லே! பாண்டுரங்கா விட்டல்லே!" என்று கூப்பாடு போட்டுக்கொண்டு குதித்துக்கொண்டு போவதையும் கருதினால் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாகவும் கஷ்டமாகவும் இருக்கும் என்பது சுலபத்தில் வெளிப்படுத்தக் கூடியதாயில்லை. இனி ஜகநாதம் என்பதைப்பற்றி சிறிது ஆராயலாம்.

ஜகநாதம்.

ஜகநாதம் என்பது இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் மிக முக்கியமானது என்று சொல்லப்படுவது. இந்துக்கள் என்போர்களில் தென்னாட்டில் உள்ள சைவர்களில் யாரோ ஒரு சிலரால் மதத்துவேஷம் காரணமாக ஜகநாதம் ஒரு சமயம் அலட்சியமாகக் கருதப்பட்டாலும் இந்தியாவில் உள்ள பெரும்பாலோரான இந்துக்கள் என்பவர்கள் எல்லோராலுமே முக்கிய ஸ்தலமாகக் கருதப்படுவது. அந்த ஸ்தலத்தின் முக்கியத்துவத்திற்கு உதாரணம் என்னவென்றால் அந்த ஜகநாதம் என்கின்ற ஊரின் எல்லைக்குள் ஜாதி வித்தியாசம் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள் அதற்கு உதாரணமாக அந்த கோவில் பூசை பண்ணுகின்றவர்கள் அந்தப் பக்கத்திய நாவிதர்கள். அவர்கள் குளத்தருகில் அடைப்பத்துடன் நின்றுகொண்டு க்ஷவரம் செய்வார்கள். பிறகு கோவிலில் பூசாரிகளாகவும் இருப்பார்கள். அந்த கோவிலில் பூசை செய்யும் உரிமையே அந்த ஊரிலுள்ள நாவித வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத்தான் உண்டு என்கின்றார்கள். அங்கு சுவாமிக்கு முன்னால் சாப்பாட்டை மலை போல் குவித்து ஆராதனை செய்வார்கள். அந்தச் சாதத்தைப் பூசாரிகள் பங்கு பிரித்து எடுத்துக்கொண்டு வெளியில் வந்து விற்பார்கள். யாத்திரைக்காரர்கள் யாராயிருந்தாலும் அதை வாங்கிச் சாப்பிட வேண்டும். மற்றபடி கடையிலும் சாதத்தை சட்டியில் வைத்து விற்பார்கள். ஜாதி வித்தியாசம் என்பதில்லாமல் யாரும் வாங்கிச் சாப்பிடுவார்கள். தவிர அந்த ஸ்தல எல்லைக்குள் எச்சில் வித்தியாசம் பார்க்கக்கூடாது என்பார்கள். இலையில் உள்ள சாப்பிட்ட மீதியை எடுத்து திரும்பவும் சட்டிக்குள் போட்டுக்கொள்வார்கள் கடைகளில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாதச் சட்டியில் யாரும் கைவிட்டு சாதத்தை எடுத்து வாயில் போட்டுப் பார்த்து மீதியை சட்டியிலேயே போட்டுவிடலாம். அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

ஜகநாதத்திலுள்ள அந்த ஜகநாதர் கோவிலுக்குள் யாரும் போகலாம்; சாமியைத் தொடலாம். காலைத் தொட்டுக் கும்பிடலாம். இது மாத்திரமல்லாமல் அந்த எல்லைக்குள் யாரும்

திதி, விரதம், தர்ப்பணம் முதலிய அனுஷ்டானங்கள் ஒன்றும் செய்யக்கூடாதாம். செய்தால் பாவமாம். அன்றியும் அங்குள்ள சாமிகள் கிருஷ்ணன், பலராமன், சுபத்திரை ஆகிய மூவர்கள் அதாவது மற்ற இடங்களைப்போல் சாமி, புருஷன் பெண் ஜாதியுடன் இல்லாமல் அண்ணன், தம்பி, தங்கை ஆகிய மூன்று பேர்களும் தங்கையாகிய சுபத்திரையை நடுவில் வைத்து அண்ணன்மார் இருவர்களும் இரு பக்கத்தில் நிற்கின்றார்கள். இதுவும் மரக்கட்டையில் அரைகுறையாய் செய்த உருவங்கள்தான் விக்கிரகங்கள்.

இந்த ஊரைப்பற்றிச் சொல்லும்போது 'சர்வம் ஜகநாதம்' என்று சொல்லுவது ஒரு வழக்கம். அதாவது எந்த விதமான வித்தியாசமும், அதாவது ஜாதி, மதம், எச்சில், விரதம் முறை முதலிய வித்தியாசம் அந்த எல்லைக்குள் இல்லை என்பதை காட்டுவதற்காகச் சொல்லுவது. இதற்கு ஆதாரமாக இரண்டுவிதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒன்று, இப்படி விஷ்ணு என்னும் முழுமுதற் கடவுளின் அவதாரமாகிய கிருஷ்ணன் என்னும் கடவுள் இறந்த பிறகு அந்தக் கடவுளின் பிணத்தை துவாரகைச் சுடுகாட்டில் வைத்து தகனம் செய்து அது எரிந்து கொண்டிருக்கையில் திடீரென்று சமுத்திரம் பொங்கியதால் துவாரகை முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிட்டபோது இந்தக் கடவுளின் பிணமும் எரிந்துகொண்டிருந்த சுடுகாடும் தண்ணீருக்குள் மூழ்க நேரிட்டதால் அரைகுறையாய் வெந்த பிணக்கட்டையானது தண்ணீரில் மிதந்து கரை ஓரமாய் ஒதுங்கியதாகவும், அந்த ஊருக்கு ஜகநாதம் என்று சொல்லப்பட்டதாகவும் அந்த ஊரார் அந்தக்குறை பிணத்தை எடுத்து அதன் சக்தியை ஒரு மரக்கட்டையில் ஏற்றி அம்மரக்கட்டையில் இருந்து குறைப் பிணம் போலவே ஒரு உருவம் செய்து அதை வைத்து பூசித்து வருவதாகவும் அந்த ஸ்தலத்தின் சரித்திரம் சொல்லுகின்றது.

மற்றொன்று, கிருஷ்ண பகவானின் லீலா விநோதங்களில் ஒன்றாகிய கோபிகளுடன் கூடி குலாவி வருவதை கிருஷ்ண பகவானின் தங்கையாகிய சுபத்திரை பார்த்து பொறாமைப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சென்று "ஓ அண்ணாவே! நீ எவ்வளவோ அழகாகவும் பெருமை உள்ளவனாகவும் இருக்கின்றாய்,

உன்னுடன் கூடி அனுபவிக்கும் பெருமை கோபிமார்கள்எல்லோரும் பெற்று அனுபவித்து வருகின்றார்கள். ஆனால் நானோ உனக்கு தங்கையாக பிறந்து விட்ட காரணத்தினால் அந்த சுக போகத்தை அடைய யோக்கியதையில்லாதவளாய்ப் போய்விட்டேன்" என்று துக்கப்பட்டதாகவும், கிருஷ்ண பகவான் பார்த்து "உலகத்திலேயே மிகவும் புண்ணிய பூமியாகிய ஜகநாதம் என்கின்றதாக ஒரு ஸ்தலம் இருக்கின்றது; அங்கு எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது; எந்த விதமான செய்கைக்கும் பாவம் கிடையாது; ஆதலால் அந்த ஜகநாதத்திற்குப் போய் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிக்கலாம்" என்பதாகச் சொல்லி ஜகநாதத்திற்கு வந்து கிருஷ்ணன், சுபத்திரை, பலராமர் ஆகிய சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்து இருப்பதாகவும் ஒரு கதையை ஜெகநாத பண்டாக்கள் ஸ்தல மகிமையைச் சொல்லும் முறையில் சொல்வதுண்டு.

எனவே இந்தக்கதையும் பொருத்தமான தாயிருக்கலாம் என்கின்ற மாதிரியில் தான் அங்கு மற்ற விஷயங்களும் இருக்கின்றன. அதாவது தீட்டு இல்லை; ஜாதி வித்தியாசமில்லை; விரதாதி அனுஷ்டானம் இல்லை; எச்சில் வித்தியாசமில்லை என்பது போன்ற பல விஷயங்கள் இருப்பதுடன் அண்ணன்மாரும் தங்கையும் ஒன்றாய் இருந்தாலும் இருக்கலாம். அன்றியும் அந்த ஸ்தலத்திற்கு அதிகமான யோக்கியதை கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின்பேரில் இப்படி ஒரு கற்பனை செய்து இருந்தாலும் இருக்கலாம். சாதாரணமாக சைவசமயத்திலும் ஒரு ஸ்தலத்தையோ தீர்த்தத்தையோ ஒரு சாமியையோ பெருமைப் படுத்துவதில் இதுபோன்ற அல்லது இந்த தத்துவங்கொண்ட கதைகள் சொல்லப்படுவதையும் பார்க்கின்றோம். அதாவது திருவிளையாடல் புராணத்தில் ஒருவன் தன் தாயைப் புணர்ந்ததுடன் தகப்பன் கண்டு கோபித்ததற்கு தகப்பனையும் கொன்றுவிட்ட பாவத்தை சிவன் போக்கியிருப்பதாகவும் அந்த ஸ்தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் அந்த கடவுளுக்கும் இன்னமும் அந்த சக்திகள் இருப்பதாகவும் கருதும்படி சொல்லப்படுகிறது. ஆதலால் இப்படிப்பட்ட கதைகள் கட்டுவது ஒரு அதிசயமல்ல. எனவே இந்தக்கதை எப்படி இருந்தாலும் முதல் கதையைப்பற்றி யோசிப்போம்.

கடவுள் அவதாரமாகிய கிருஷ்ண பகவான் எவ்வளவோ அற்புதங்களைச் செய்தவர். கடவுளான அவர் செத்துப்போனார் என்பதும் அவர் பிணம் கொளுத்தப்பட்டது என்பதும், நெருப்பில் வெந்துகொண்டிருக்கும்போது ஜலப்பிரளய மேற்பட்டு அந்தப் பிணம் சரியாய் வேகாமல் தண்ணீரில் மிதந்து கொண்டு வந்து ஜகநாதத்தைச் சேர்ந்த கடற்கரையில் ஒதுங்கியது என்பதும் ஆகிய விஷயங்களை யோசித்துப்பார்த்தால் கிருஷ்ணனிடத்தில் கடவுள் தன்மை இருந்திருக்கும் என்று நம்ப இடமுண்டா? நம்புவதானாலும் செத்தபிறகு அந்தப்பிணத்திற்கு அதுவும் நெருப்பில் கருக்கப்பட்ட அரைகுறைப் பிணத்திற்கு ஏதாவது சக்தி இருந்திருக்குமா? அந்த சக்தியை மாக் கட்டையில் ஏற்றமுடியுமா? அந்த மாக்கட்டையும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்ற போதெல்லாம் அந்த சக்தி மாறிமாறி அதில் வருமா?

தவிர மற்றும் ஒரு அதிசயம் சொல்லுகிறார்கள். அதாவது கோவிலில் இருக்கும் மாக்கட்டைக்கு சக்தி குறைந்துபோனால் அந்த சமயம் அதாவது 10 அல்லது 20 வருஷத்திற்கு ஒருமுறை மறுபடியும் சமுத்திரத்தில் ஒரு கட்டை முன்பு பிணம் மிதந்து வந்ததுபோல் மிதந்து வருமாம். அதை எடுத்து மறுபடியும் விக்கிரகம் செய்துவைத்து விடுவதாம். இதன் யோக்கியதைகளை வாசகர்கள் தான் யோசித்துப்பார்க்கவேண்டும்.

முன்புவந்த குறைப்பிணம் ஜலப்பிரளயத்தால் வந்தது என்று சொல்லப்படுகின்றது. அதுபோல் இப்போது வந்துகொண்டிருக்கும் மாக்கட்டைக்கும் ஏதாவது ஜலப்பிரளயம் கற்பிக்கப்படுகிறதா? எனவே புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் சிறந்த புண்ணியஸ்தலமான ஜகநாதத்தின் நிலையை அந்த ஸ்தல சரித்திரப்படியே யோசித்துப்பாருங்கள்.

இந்த் லக்ஷணத்தில் அங்கு ஒரு தீர்த்த மகிமையும் சொல்லப்படுகிறது.

இவ்வளவையும் ஒப்புக்கொண்டு அந்த ஸ்தலத்திற்கு யாத்திரை போகின்றவர்களுக்கு ஏதாவது விசேஷ ஞானம் ஏற்படு

ஹிந்தியின் மர்மம்.

(கோவை ஆ சிதம்பரம்.)

—(0)—

தமிழர்களே! வடநாட்டில் எல்லாரும் ஹிந்தி மொழியைப் பேசுகிறார்கள் என்பது மெய்யா? யார் எதைச் சொன்னாலும் தட்டிப்பேசாமல் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற எண்ணமல்லவா, தமிழ் விரோதிகளை அப்படிச்சொல்லும்படி செய்கிறது!

வட இந்தியாவில் எத்தனை மொழிகள் தற்காலம் வழங்குகின்றன என்று பாருங்கள்:—

(1) வங்காளி	(2) சிந்தி	(3) லந்தி
(4) பஞ்சாபி	(5) குஜராத்தி	(6) இராஜபுதனி
(7) குமோனி	(8) நேபாலி	(9) காஷ்மீரி
(10) பெலுச்சி	(11) இந்துஸ்தானி	(12) கடுவாலி
(13) உரியா	(14) மராட்டி	(15) பார்சி
(16) சினா	(17) கோகிஸ்தானி	(18) சித்ராலி
(19) திராகி	(20) பானி	(21) தம்லூக்

முதலிய எத்தனையோ மொழிகள். இத்தனை மொழிகளுடன் ஹிந்தியும் அதன் பிரிவுகளும் பேசப்படுகின்றன.

அவையாவன:—

கிறதா? அல்லது அந்த ஸ்தல சரித்திரத்தின் யோக்கியமான கற்பனையையாவது மதித்து ஏதாவது ஒழுக்கத்தைப் பெறுகின்றார்களா? ஒன்றுமேயில்லாமல் ரயில்சார்ஜு செலவும், பூசாரி, பார்ப்பான் முதலியவர்களுக்கு செலவும் செய்வதல்லாமல் வேறு பலன் என்ன என்பதுதான் இது எழுதியதின் கருத்தாகும்.



இத்தனை பிரிவுகளும் ஒன்றுபோல் இல்லை மற்றொன்று. ஒரு பிரிவு ஹிந்தியைப் பேசுகிறவர்களுக்கு மற்றொரு பிரிவு ஹிந்தியைத் தெரிந்து கொள்ள முடியாது.

இந்த உள் மர்மம் வடநாட்டில் யாத்திரை செய்தவர்களுக்கு எல்லாம் தெரியும்.

பங்காரி:—பஞ்சாபியும் இந்தியும் கலந்து பஞ்சாப்பின் தென் கிழக்கில் பேசப்படும் பாஷை.

பிரஜ்பாஷா:—(Muttra) வடமதுரைப் பக்கம் பேசப்படுவது. இது பஞ்சாப்பில் பேசபபடும் ஹிந்திமாதிரி அல்ல.

கானோஜ்:—பாஞ்சால நாட்டில் பேசப்படுவது. இது ஏனைய நாட்டினருக்கு விளங்காது.

பந்தேலி:—பந்தல் கண்டிலும் அதனைச் சுற்றிலும் பேசப்படுவது. இது மற்ற நாட்டினர்க்கு விளங்காது.

உருது:—டில்லியிலும் அதைச்சுற்றியும் பேசப்படுவது. மற்றைய இடங்களில் உள்ளவர்க்கு விளங்காது.

அவதி:—இது அயோத்தியிலும் அதன் பக்கத்திலும் பேசப்படுவது. இது வேறு நாட்டினருக்கு அவஸ்தைதான்.

பகேலி
சத்தீஸ்கரி } ரோஹில் கண்டிலும் அதன் பாகங்களிலும் பேசப்படுவன. வேறு இடங்களில் உள்ளவர்கள் அறிய முடியாது.

மைதிலி:—இது மிதிலா நகரங்களிலும் அதன் பக்கங்களிலும் பேசப்படுவது.

போஜ்புரி:—போஜபுரிக்குப் பக்கங்களில் பேசப்படுவது.

மககி:—இது மகத நாட்டில் பேசப்படுவது. ஆகையால் அன்பர்களே! ஹிந்தி-ஹிந்தி என்பதெல்லாம் பிராந்தியே. எந்த ஹிந்தியைப் படிப்பது எதை விட்டுவிடுவது. வடநாட்டில் பெரிய பாஷைகளில் 21-க்கு மேலும் ஹிந்தி மொழியில் 11-க்கு மேலும் இருக்க வட நாட்டில் எல்லாரும் ஹிந்தி பேசுகிறார்கள் என்று கூறுவது சுத்த பச்சைப் பொய்யல்லவா? இது பெரும்பாலும் வடநாடு செல்லாத தமிழர்களை ஏமாற்றுவதல்லவா?

முப்பத்து மூன்று கோடி ஜனங்களில் 15 கோடி தக்ஷிண தேசத்திலும், 18 கோடி காட்டிலும் உள்ளார் என்று வைத்துக் கொண்டால், 32 விதமான பாஷைகளுக்கு 18 கோடியைப் பங்கிட்டால், அரைக்கோடி ஜனங்கள் கூட ஒரு பாஷையைப் பேசவில்லையே. அப்படியிருக்க ஹிந்திப்பிரசாரகர்கள் ஹிந்தியை 25 கோடி ஜனங்கள் பேசுகிறார்கள் என்று மேடையில் பிரசங்கம் செய்வது எவ்வளவு வடிகட்டின புளுகு என்று பாருங்கள். மொடாப்புளுகனும் கச்சிந்திப்புளுகனும் ஹிந்திப்பிரசாரம் செய்பவர்களுக்கு இணையாகமாட்டான்.

ஹிந்தி, ஹிந்தி என்பதெல்லாம் மைதிலி என்ற பாஷையையே. ஹிந்தியின் சரித்திரத்தைக் குறித்து அடுத்த முறை எழுதுகிறேன்.

சுமார் 100-ஆயிரம் ஜனங்கள் கூட பேசாத மைதிலி மொழியாகிய ஹிந்தியை சுமார் ஏழுகோடி ஜனங்கள் பேசும் தமிழ் மொழி வழங்கும் நாட்டில் கட்டாயக் கல்வியாக நுழைப்பது எவ்வளவு அநீதம் என்று பாருங்கள். தமிழர்களே! இப்போது தமிழ் மொழியை விட்டுக் கொடுப்பீர்களானால், உங்கள் வாழ்வு கெட்டது. பிறகு மீட்சியில்லை. எழுங்கள்! கிளர்ச்சி செய்யுங்கள்! மன்றாடுங்கள்! தமிழ் மொழியை கட்டாய பாடமாக் எல்லா வகுப்புகளிலும் ஏற்பாடு செய்யும் வரை முயற்சியை விடாதீர்கள்!

———)O(———

"விடுதலை"

(காலணா தினசரி)

பார்ப்பனரல்லாத தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக பெருத்த நஷ்டங்களுடனும், கஷ்டங்களுடனும் ஆரம்பித்திருக்கும் ஒரு சிறந்த தமிழ் தினசரிப் பத்திரிகை.

இதன் ஆசிரியர் பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

தேசத்தின் பேரால் அன்றாடம் நடந்து வரும் பார்ப்பன சூழ்ச்சியும், காங்கரஸ் புரட்டும் அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் "விடுதலை" அவசியம் இருக்க வேண்டும். இன்று பார்ப்பன ஆதிக்கத்தை அச்சமின்றி ஆணித்தரமாய் வெளிப்படுத்தும் பத்திரிகை இது ஒன்றேயாகும். பெருத்த நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்குமிடையில் இப்பத்திரிகை நடத்தப்படுவதால் தமிழ் மக்களான அபிமானிகளும் அனுதாபிகளும் பத்திரிகை வளர்ப்புக்கு தங்கள் தங்களால் கூடுமான நன்கொடையும் ஆதரவும் அளிக்க வேண்டியது கடமையும் அவசியமுமாகும்.

சந்தா விகிதம்.

தபால் மூலம் முன் பணமாக

ஒரு வருடத்திற்கு	7—8—0	6 மாதத்திற்கு	4—0—0
3 மாதத்திற்கு	2—0—0	ஒரு மாதத்திற்கு	0—11—0

ஏஜண்டுகள் உள்ள இடத்தில் பத்திரிகை 1-க்கு விலை காலணா.

ஏஜன்ஸியாக இருக்க ஆசைப்படுபவர்கள் 25 ரூபாய் டிபாசிட் கட்ட வேண்டும்.

கமிஷன், மறு தெரிவிப்பு வரை பத்திரிகை 1-க்கு 1 தம்பிடி. தினம் 100 பத்திரிகை விற்றால் தினம் 8 அணா ஆதாயம்.

விலாசம்:—

மானேஜர், "விடுதலை" ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)○(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமூகவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மேக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0 6 0
ஷை	2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
ஷை	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.)		0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னாட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ருஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யம் கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the
Unmai vilakam Press, Erode.